# அரசாங்க நிதி பற்றிய குழு

## வரவுசெலவுத் திட்டம் - 2017

### அரசிறை, நிதி மற்றும் பொருளாதார ஊகங்கள் பற்றிய மதிப்பீடு

2016 நவம்பர் 22

**குழு அங்கத்தவர்கள்**

கௌரவ எம்.ஏ.சுமந்திரன் (தவிசாளர் )

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ லசந்த அலகியவன்ன

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ பந்துல குணவர்தன

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி

கௌரவ மாவை. சோ. சேனாதிராசா

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ (டாக்டர் )ரமேஷ் பதிரண

கௌரவ ஈ. சரவணபவன்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ முஹமட் நவவி

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ (டாக்டர் ) (திருமதி) துஸிதா விஜேமான்ன

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

## அறிமுகம்

வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை மேற்கொள்ள அடிப்படைகளாகப் பயன்படுத்தப்பட்ட அரசிறை, நிதி மற்றும் பொருளாதார ஊகங்கள் பற்றிய மதிப்பீட்டினை வரவு செயலுத் திட்டம் பாராளுமன்றததில் சமர்ப்பிக்கப்பட்டு 4 நாட்களுக்குள் வழங்கும் பணிக்கான ஆணையினை அரசாங்க நிதி பற்றிய குழு (COPF ) கொண்டுள்ளது. 2016 நவெம்பர் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் 2017ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அந்த ஆணையின் நிறைவேற்றலாக இந்த அறிக்கை எழுதப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டினை மேற்கொள்ளும் செயல்முறையில் முகங்கொடுத்த இக்கட்டுக்கள் மற்றும் கரிசனைகளை ஆரம்பத்தில் குழு பதிவு செய்கின்றது.

- 2017 வரவுசெலவுத் திட்ட உரையில் வழங்கப்பட்ட எண் குறிகள் , 2016 நவம்பர் 10 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள், 2017 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டச் சமர்ப்பனத்திற்கு முன்னர் நிதி அமைச்சினால் 2016 நவெம்பர் 02 ஆம் திகதி குழுவிற்கு வழங்கப்பட்ட ஊகங்கள் மற்றும் வளங்கள் ஆகியவற்றினை மதிப்பீடு அடிப்படையாகக் கொண்டிருக்கும் என எதிர்ப்பார்க்கப்பட்டது.
- எவ்வாறாயினும் , வரவுசெலவுத் திட்ட உரையுடன் பாராளுமன்றத்தில் வழங்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. வரிசைப் பிரிவு விபரங்களில் சிலவற்றையும் குழுவிற்கு முன் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கங்களினையும் ஆய்வறிவிற்கு இணங்க அரசாங்க நிதி பற்றிய குழுவினால் முடியவில்லை. குழு நிதி அமைச்சிடம் தெளிவுபடுத்தலைக் கோரியது. நவம்பர் 12ஆம் திகதி அமைச்சு இணங்க அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு இரண்டு A4 தாள்களைச் சமர்ப்பித்தது. அதில் வேறு தொகுதி எண் குறிகள் இருந்தன. அதில் எண் குறிகளின் பிரிப்பு விபரங்கள் வரவு செலவுத் திட்டத்தில் பாராளுமன்றத்திற்கு எவை சமர்ப்பிக்கப்பட்டனவோ அவற்றுடன் மிகவும் துல்லியமாகப் பொருந்தின. மேலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் வரைபு வரவுசெலவுத் திட்டத்துடனும் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னைய ஊகங்கள் மற்றும் விளக்கங்களுடனும் கணிசமாக வேறுபட்டன. இந்த மிகச் சமீபத்திய எண்குறிகள் இப்போது 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் எனக் குறிப்பிடப்படும்.
- பாராளுமன்றம் பெற்றுக்கொண்ட மதிப்பீடுகளுக்கும் 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகளுக்கும் இடையிலான வித்தியாசங்களை அட்டவணை 2 காட்டுகின்றது. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட எண்ணக்குறிகளில் கணிசமான வேறுபாடு காணப்படுகின்றதனால், குழு எப்போதும் மிகச் சமீபத்திய எண் பெறுமானத் தொகுதிகளைப் (2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள்) பயன்படுத்த முயற்சித்தது. அவற்றில் தகவல்கள் இல்லாத போது முதலாவதாக வரவுசெலவுத்திட்ட உரையிலிருந்தும், 2017 ஆம் ஆண்டின் வரைபு வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்தும் பெற்றுக்கொண்டன. இந்த முறையில் கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த தரவுகளைப் பயன்படுத்த நவம்பர் 12ஆம் திகதியிலிருந்து குழு அதன் மதிப்பீடுகளில் மாற்றத்தினை மேற்கொண்டது.
- பாராளுமன்றத்திற்கு வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட் பின்னரான 4 நாட்கள் எனும் சவால் மிகுந்த நேரக் கட்டுப்பாடுகளின் கீழ் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. வரவுசெலவுத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எண்குறிகளுக்கான அடிப்படையான 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகளை நிதி அமைச்சு இந்தக் குழுவிற்கு காலந்தாழ்த்திச் சமர்ப்பித்த காரணத்தினால் உள்ளார்ந்த தரவுகள் மாற்றத்திற்கு உட்படுத்தப்படுகின்றமையினாலும் தயாரிப்பு மேலும் சவாலுக்குட்பட்டது. எழக்கூடிய ஏதாவது

வழுக்கள் மற்றும் விடுபாடுகள் தொடர்பாக வருத்தம் தெரிவிக்கப்படுகின்றது. பாராளுமன்றத்திற்கு அறிவிப்பதற்கும் சம்பந்தப்பட்ட தகவல்களை அணுகுவதனை மேம்படுத்துவதற்கும் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை மேம்படுத்துவதற்கும் இந்த அறிக்கை பிரதானமாக பயன்படுத்தப்படல் வேண்டும் . இது இறுதியானதும் திட்டவட்டமானதுமான பகுப்பாய்வாக இருக்குமென எதிர்ப்பார்க்க முடியாது .

- இந்த 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் குழுநிலை விவாதம் ஆரம்பிக்க முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனக் குழு பரிந்துரைக்கின்றது.
- நிதி அமைச்சின் ஊகங்கள் எதிர்காலத்தில் இதைவிட யதார்த்தபூர்வமாகவும் பாராளுமன்றத்திற்கு தெளிவுத்தன்மையுடன் கூடிய வகையிலும் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமது நேரத்தினையும் நிபுணத்துவத்தையும் ஊதியமின்றித் தன்னார்வத்துடன் வழங்க முன்வந்த சுயாதீனமான நிபுணர்களால் குழுவின் பணிக்கு உதவி வழங்கப்பட்டது. கலாநிதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க , திருமதி ரோஸ் குரே, திருவாளர்கள் தேமிய ஹுருள்ளே , சரத் மாயாதுன்ன மற்றும் கலாநிதி நிசான் டி மெல் தலைமையில் இயங்கும் வெரிடெ (Verite) ஆய்வினூடாகப் பணியாற்றும் பொருளியலாளர் அணியினர் வழங்கிய அளப்பரிய உள்ளீடுகளுக்கும் உதவிக்கும் குழு நன்றி தெரிவிக்க விரும்புகின்றது.

**மதிப்பீடு**

இந்த அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள மதிப்பீடு இரண்டு பிரிவுகளாக வழங்கப்பட்டுள்ளது. I ஆம் பிரிவு வரவு செலவுத் திட்டத்திலுள்ள வருமான மதிப்பீடுகள் பற்றிய மதிப்பீடாகும். II ஆம் பிரிவு வரவுசெலவுத் திட்டத்தின் செலவு மதிப்பீடுகள் பற்றிய மதிப்பீடாகும்.

குழுவின் பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றின் முறையியல் மற்றும் அணுகுமுறை தொடர்பான இந்த அனைத்தையும் உள்ளடக்கும் மிக முக்கியமான கருத்துகளைக் குழு குறிப்பிட விரும்புகின்றது.

- மதிப்பீட்டிலுள்ள சகல எண் குறிகளும் நடப்புப் பெறுமானப் பதங்களில் கலந்துரையாடப்படுகின்றன. (வெவ்வேறு வருடங்களுக்கான பணவீக்கச் சீராக்கங்கள் இல்லை)
- 2016 முதல் 2017 வரையான ஊகங்களை மதிப்பிடுகையில், பணவீக்கமானது (மொத்த வெளியீட்டில் பெயரளவிலான வளர்ச்சி ) 4% ஆக உள்ளது என்கின்ற மேலும் 2017இல் மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சியானது வரவுசெலவுத் திட்டதில் சமர்ப்பிக்கப்படடவாறு 6.3% என்கின்ற அரசாங்கத்தின் நோக்கினை முதலில் பகுப்பாய்வில் ஏற்றுக்கொண்டுள்ளது. எதிர்வு கூறப்பட்டுள்ள மொத்த தேசிய உற்பத்தித் வளர்ச்சியிலுள்ள சாத்தியமான வேறுபாடுகள் தொடர்பாகக் குழு துல்லியமான நுண்மைப் பகுப்பாய்வினை முற்கொள்ள முயற்சிக்கவில்லை.
- பல்வேறு வருமானங்கள் மதிப்பீடுகளுக்கான 2017 வருடாந்த வளர்ச்சியினை ஒப்பிடுகையில் பயன்படுத்திய உசாவல் அளவீடு 2009-2014 (இரண்டு வருடங்கள் உள்ளடங்களாக) காலப்பகுதியின் போதனான சராசரி வளர்ச்சியாகும். 2015 ஆண்டுக்குரிய இலக்கங்கள் உள்ளடக்கப்படவில்லை

பிரிவு 1: வரவுசெலவுத் திட்டத்தில் வருமான மதிப்பீடுகள்

அரசாங்கததின் மொத்த வருமானம் 2088 பில்லியன் இலங்கை ரூபா என 2017 வரவுசெலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2016 ஆம் ஆண்டில் எதிர்ப்பார்க்கப்பட்ட வருமானத்தைவிட 26.7% அதிகரிப்பாகும். மாறாக 2015முதல் 2016 வரையான வருமான அதிகரிப்பு 9.2 % மட்டுமே ஆகும். ஆக்கக்கூற்றுப் பகுதிகளில் உள்ள மொத்த வருமானத்தினைப் பரிசீலிப்பதன் மூலம் வருமான எதிர்ப்பார்ப்பில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பினை நியாயப்படுத்துவதற்காக வரவுசெலவுத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஊகங்களும் செயற்பாடுகளும் இங்கே மதிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 1 : 2017ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட உரையில் வழங்கப்பட்டவாராக வருமான மதிப்பீடுகள் ( இலங்கை ரூபா பில்லியன்)**

| | வருமானம் | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|
| | **மொத்தம்** | **1509 (100%)** | **1648(100%)** | **2088(100%)** |
| | வரி வருமானம் | 1356(90%) | 1432(87%) | 1821(87%) |
| 1 | வருமான வரி | 263(17%) | 236(14%) | 335(16%) |
| 2 | பண்டங்கள் சேவைகள் மீதான வரி | 804 (53%) | 854(52%) | 1086(52%) |
| 2.1 | சேர் பெறுமதி வரி (மேற்படி) | 220(15%) | 315(19%) | 380(18%) |
| 2.2 | உற்பத்தி வரி (மேற்படி) | 498(33%) | 444(27%) | 575(28%) |
| 3 | வெளி வர்த்தகம் மீதான வரிகள் | 289(19%) | 342(21%) | 400(19%) |
| 3.1 | இறக்குமதி வரி /செஸ் (மேற்படி) | 179(12%) | 190(12%) | 225(11%) |
| 3.2 | கப்பற்துறை மற்றும் விமானத்தறை வரி/ அதுதியாவசியப்பொருற்கள் வரி (PAL/SCL) (மேற்படி) | 110(7%) | 152(9%) | 175(8%) |
| 4 | வரி அற்ற வருமானம் | 99(7%) | 144(9%) | 189(9%) |
| 5 | மாகாண சபைகள் | 54(4%) | 72(4%) | 78(4%) |

மூலம் – 2017 வரவுசெலவுத் திட்ட அறிக்கை[1]

[1] மிகவும் வேறு பிரிக்கப்பட்ட மட்டத்தில் வருமானப் பகுப்பாய்வானது திறைசேரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பிற்சேர்க்கை 1 இல் 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது

.

**அட்டவணை 2: அரசாங்க வருமானததிற்கான வரவுசெலவுத் திட்ட உரை மற்றும் வெளியிடப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் முன்னைய ஊகங்கள் ஆகியவற்றிலுள்ள வித்தியாசங்கள் (இலங்கை ரூபா பில்லியன்கள்)**

| | வருமானம் | 2017வரைபு மதிப்பீடுகளில் இருந்து தொகுதி 1-3 | 2017 வரவு செலவுத் திட்ட உரை/ 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகளில் இருந்து | வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இருந்தான மாற்றம் தொகுதி 1-3 |
|---|---|---|---|---|
| | மொத்தம் | 1890 | 2088 | 198(10.5%) |
| | வரி வருமானம் | 1710 | 1821 | 111(6.5%) |
| 1 | வருமான வரி | 278 | 335 | 58(20.5%) |
| 2 | பண்டங்கள் சேவைகள் மீதான வரி | 1026 | 1086 | 60(5.8%) |
| 2.1 | சேர் பெறுமதி வரி | 380 | 380 | 0(0%) |
| 2.2 | உற்பத்தி வரி (மேற்படி) | 544 | 575 | 5.7% |
| 3 | வெளி வர்த்தகம் மீதான வரிகள்(மேற்படி) | 396 | 400 | 4(1.0%) |
| 3.1 | இறக்குமதி தீர்வை மற்றும் செஸ்(மேற்படி) | 220 | 225 | 5(2.3%) |
| 3.2 | கப்பற்துறை மற்றும் விமானத்தறை வரி/ அதுதியாவசியப்பொருற்கள் வரி (PAL/SCL) (மேற்படி) | 175 | 175 | 0(0%) |
| 4 | ஏனைய வரிகள் | 114 | 131 | 7(14.9%) |
| 5 | வரியல்லாத வருமானம் | 180 | 189 | 9(5%) |
| 6 | மாகாண சபைகள் | 78 | 78 | 0(0%) |

மூலம்: வரவுசெலவுத் திட்ட உரை 2017, வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் (வரைபு) 2017: 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் நிதி அமைச்சு

குறிப்பு: பிற இடங்களில் குறிப்பிடப்படாத சர்வதேச வர்த்தகம் மீதான ஏனைய வரிகள், உரிமம் மீதான வரிகள், தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி, தொலைத் தொடர்பாடல் விதிப்பனவு, புகையிலை வரி, எஸ்.சீ.எல், மோட்டார் வாகன நிவாரண வரி மற்றும் ஏற்றுமதி வரி என்பனவற்றை உள்ளடக்கிய வகையில் வரவுசெலவுத் திட்ட வரைபு மதிப்பீடு தொடர்பிலான ஏனைய வரிகள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1. <u>வருமான வரி</u>

வருமான வரி எடுகோள்களும் நடவடிக்கைகளும் வரவு செலவுத் திட்டததில் குறைந்த பட்சம் மூன்று வகைகளின் கீழ் வகை செய்யயப்பட்டுள்ளன.1.1. கூட்டிணை வரி, 1.2 உழைக்கும்போதே செலுத்தும் வரி, 1.3 பிடித்துவைக்கும் வரி.

நடப்பு பகுப்பாய்வில் இந்த ஒவ்வொரு வகைகளும் தனியாக ஆராயப்படும்.

### 1.1 கூட்டிணை வரி

| வருமான வகை | 2017 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் | மொத்த வருமானததி ன்சராசரி | 2009-2014 சராசரி வளர்ச்சி | 2016 இல் இருந்து அதிகரிப்பு (இலங்கை ரூபா பில்லியனில்) | கொள்கை மாற்றங்கள் காரணமாக (இலங்கை ரூபா பில்லியனில்) | சாதாரண வளர்ச்சி மற்றும் சிறந்த நிர்வாகம் காரணமாக (இலங்கை ரூபா பில்லியனில்) |
|---|---|---|---|---|---|---|
| கூட்டிணை வரி | 158 | 8% | 8.2% | 48 | 32 | 16 |

மூலம் : 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2015

**ஊகங்களும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும்**

**ஊகங்கள்**:
2016 அடிப்படையில் 14.5 % (கொள்கை நடவடிக்கைகள் எதுவுமின்றி ) இலாப வரிவிதிப்பின் பின்னர் பெயரவிலான அதிகரிப்பொன்று.

**செயல்கள்**:
சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள்(சி.ந.தொ) மற்றும் ஏற்றுமதியாளர்களுக்காக 12% திலிருந்து 14% கம வணிகம் மற்றும் கல்விக்கு 10% திலிருந்து 14% ஏற்றுமதி சேவைகள் மீது 0% திலிருந்து 14% சேவை ஏற்றுமதி சுற்றுத்துறை , நிர்மாணம், சுகாதார வசதி ஆகியவற்றுக்கு 12% திலிருந்து 28% பங்கிலாபம் பில்லியனால் மாத்திரமே அதிகரிக்குமென வரவு செலவுத் திட்டம் எதிர்ப்பார்க்கின்றது. அதாவது அநேகமாக அனைத்து முறிகள் மீதான வருமான வட்டி 10% இலிருந்து 14% வரையில் கீழ் வரிவிதிப்பு அடுக்கில் அதிகரிப்பு சி.ந.தொ. ஒன்றை வரையறை செய்வதற்கான மொத்த விற்பனை தொடக்க நிலை இலங்கை ரூபா 750 மில்லியனிலிருந்து ரூபா 500 மில்லியன் வரை குறைவடைந்துள்ளது. மேலும் வரி நிர்வாகத்தில் RAMIS முறைமை நடைமுறையாக்கத்தை உள்ளடக்கி, மேம்பாட்டை ஏற்படுத்தி வரி சேகரிப்பை மேம்படுத்துவதற்கான எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.

**பகுப்பாய்வு**

**கடந்த கால அனுபவம்**: 2009 முதல் 2014 ஆம் ஆண்டு வரையில் சராசரி கூட்டிணைவரியின் வளர்ச்சியானது 8.2% மாக காணப்பட்டது. அதேகாலப் பகுதியில் உண்மையான கூட்டிணைவரியானது வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டைவிட 16.9% குறைவாகக் காணப்பட்டது.

அதாவது , கூட்டிணை வரிகள் தொடர்பில் நிதி அமைச்சானது உண்மையான வெளியீடுகளுக்கு இசைவான மதிப்பீடுகளை வரவுசெலவுத் திட்டத்தில் வழங்குவது தொடர்பில் மோசமான வரலாற்றையே கொண்டுள்ளது.

**தற்போதைய மதிப்பீடு**

16 பில்லியன் இலங்கை ரூபாய் அதிகர்ப்பானது அடிப்படையில் 15% வளர்ச்சியை அனுமாணிக்கின்றது. இச் செயற்பாடானது பொருளாதார விஸ்தரிப்பின் ஊடாக ஏற்படும் கிட்டத்தட்ட 10% பெயரளவிலான வருமான வளர்ச்சிக்கு மேலதிகமாக, குறைந்தபட்சம் 5% வருமான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்குரிய வருமான நிர்வாக நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமைந்தால் மாத்திரமே சாத்தியமாகும். மேற்படி கொள்கை நடவடிக்கைகளில் வரிவிதிக்கக்கூடிய தளங்களில் அதிகரிப்பொன்றையும் மேம்பாடடைந்த நிர்வாக வல்லமை ஊடாக வரிச்சேகரிப்பு தளத்தில் அதிகரிப்பொன்றையும் உள்ளடக்கி வரி சேகரிப்பில் மூட்டிணைந்த அதிகரிப்புக்கு வழியமைத்தல் மூலம் வழங்கப்பட்ட இலங்கை ரூபா 158 பில்லியன் மில்லியன் மதிப்பீட்டுக்கு பாதுகாப்பளிக்கலாம்.எதிர்ப்பார்த்தவாறு கூட்டிணைவரியின் மொத்த அதிகரிப்பு 44% அதிகரிப்பை எட்டுவதற்காக இவ்விரண்டும் 15% தால் அதிகரிக்க வேண்டும்.

**அவதானிப்புகள்**

- கூட்டிணை வருமான வரி சேகரிப்பில் 44% ஒட்டுமொத்த அதிகரிப்பொன்று கடந்தகால அனுபவதின் அடிப்படையில் அவ்வாறான கொள்கைசார் நடவடிக்கைகள் எத்தனிக்கப்படும் பட்சத்தில் விரும்பத்தக்கதாக உள்ளது.
- வரி சேகரித்தல் தளத்தை வெற்றிகரமாக 15 வீதமாக அதிகரிப்பதில் நிர்வாக ரீதியான முக்கிய ஆபத்துக்கள் காணப்படுகின்றன. வரவுசெலவுத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் ஊடாக வரிச்சேகரிப்பு தளத்தை வெற்றிகரமாக 15% ற்கு மேலான அதிகரிப்பை ஏற்படுத்துவதாக இருப்பினும் வரியிடக்கூடிய தளத்தில் முழு அதிகரிப்பை நிர்வாக ரீதியில் கைப்பற்றுவதிலும் அதே ஆபத்து காணப்படுகின்றது.
- ஆபத்துகள் மற்றும் முரண்பாடுகளுக்கு காரணங்கூறும் வகையில் இலங்கை ரூபாய் 26 பில்லியன் மதிப்பீடுகளில் கீழ்நோக்கிய திருத்தத்தை மேற்கொள்வது அதிகமாக மதிப்பீடொன்றை உறுதிசெய்யும் என்பது எமது அபிப்பிராயமாகும். அச்செயற்பாடானது கூட்டிணை வரி சேகரிப்பை அடுத்த வருடத்தில் 20% ற்கு அதிகரிப்பதற்கான நம்பிக்கையுடைய மதிப்பீடொன்றை அனுமதிக்கின்றது. 2009-2014 வரையிலான 6.8 சராசரி வீதமான இருமடங்கு அதிகரிப்பொன்று.
- நிதி அமைச்சானது இவ்விடயம் பற்றிய வரவு செலவுத் திட்ட எதிர்கூறல்களை மேற்கொள்வதில் மோசமானவொரு வரலாற்றை கொண்டுள்ளது .

### 1.2 உழைக்கும் போதே செலுத்தும் வரி (PAYE)

| வருமான வகை | 2017 இல் 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் | மொத்த வருமானத்தின் சதவீதம் | 2009-2014 வளர்ச்சி(கால அளவின் சராசரி) | 2016 இலிருந்து அதிகரிப்பு (இலங்கை ரூபாய் பில்லியன்) | கொள்கை மாற்றததின் மூலமென கருதப்படுவது) (இலங்கை ரூபாய் பில்லியன்) | சாதாரண வளர்ச்சி மற்றும் சிறந்த நிர்வாகததின் மூலம் என கருதப்படுவது சிறந்(இலங்கை ரூபாய் |
|---|---|---|---|---|---|---|

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | பில்லியன்) |
| உ.செ.வ. | 51 | 3% | 8.3% | 19 | 2.5 | 16.5 |

மூலம் : 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2015

**ஊகங்களும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும்**

**ஊகங்கள்** :

உழைக்கும்போதே செலுத்தும் வரிகள், கொள்கை நடவடிக்கையின் காரணமாக இலங்கை ரூபாய் 2.5 பில்லியனால் மாத்திரமே அதிகரிக்குமென வரவு செலவுத் திட்டம் எதிர்ப்பார்க்கின்றது. அதாவது, அநேகமாக அனைத்து அதிகரிப்பும் (19 பில்லியன் 16.5 பில்லியன்) கொள்கை நடவடிக்கைகள் காரணமாக அல்லாமல் வருமானங்களின் சாதாரண வளர்ச்சி மற்றும் சிறந்த நிர்வாகம் ஆகியவற்றில் இருந்தே பெற்றுக்கொள்ள அனுமானிக்கப்படுகின்றது.

**நடவடிக்கை**

16% இலிருந்து 24% வரையிலான அதிகபட்ச வரி அதிகரிப்பு , வருடாந்த மொத்த விற்பனை தொடக்க வரி இலங்கை ரூபாய் 750,000 இலிருந்து இலங்கை ரூபாய் 1, 200.00 வரை அதிகரிப்பு. மொத்த விற்பனை தொடக்க வரிக்கு உட்படாத மேலதிக வருவாய்க்கு ஆண்டுக்கு ஒவ்வொரு மட்டத்திலும் இலங்கை ரூபாய் 600,000 வின் சமமான பகுதிகளாக 4 சதவீதத்தில் இருந்து 24 சதவீதம் வரை படிப்படையான வீத கட்டமைப்பில் வரி விதிக்கப்படும்.

**பகுப்பாய்வு**

**கடந்த கால அனுபவம்**: உழைக்கும்போதே செலுத்தும் வரியின் சராசரி வளர்ச்சியானது 2009-2014 வரையில் தற்போதைய எதிர்ப்பார்ப்பான 59% மேற்பட்ட அதிகரிப்புக்கு மாறாக 8.3% மாகவே காணப்பட்டது. கடந்த காலத்தில் உழைக்கும் போதே செலுத்தும் வரியில் சிந்தித்தவாறு பெரிய அளவில் அதிகரிப்பு ஏற்படட காலமொன்று காணப்படவில்லை .

**தற்போதைய மதிப்பீடு**: கொள்கை நடவடிக்கைகளின் செயற்பாடானது வரிச் சேகரிப்பை அதிகரிக்கவும் குறைக்கவும் காரணமாகவுள்ளது. இந்த அதிகரிப்பானது தற்போதைய 16% இலிருந்து ஆகக் கூடிய வரி வீதமான 24% அதிகரிப்பில் இருந்து வருகின்றது . இந்த குறைப்பானது ஆரம்ப மொத்த விற்பனை தொடக்கநிலை வரியை ஆண்டிற்கு இலங்கை ரூபாய 750,000 ஐ ஆண்டிற்கு இலங்கை ரூபாய 1,200,000 ற்கு நகர்த்துவதன் மூலம் ஏற்படுகின்றது. நாட்டின் வருமான பகிர்வு / விநியோகம் உயர்ந்த வருமானத்தை விடக் குறைந்த வருமானம் நோக்கி சரிந்துள்ளமையானது புதிய உயர் வட்டி வீதத்திற்கு பிடிபடுவோரின் எண்ணிக்கையானது மொத்த விற்பனை தொடக்க நிலை மட்டங்களில் அதிகரிப்பு ஏற்பட்டதன் காரணமாக ஒப்பீட்டளவில் குறைந்த வரிக்கு முகங் கொடுக்கும் நபரின் எண்ணிக்கையுடன் மிகவும் குறைவாக இருக்கும். இருப்பினும் எடுக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைகளின் அடிப்படையில் 2.5 பில்லியன் அதிகரிப்பு ஒன்று இருக்குமென வரவுசெலவுத் திட்டம் அனுமானிக்கின்றது.

மேம்படுத்தப்பட்ட சேகரிப்ப மீதான கடந்த கால போக்கு மற்றும் தற்போதைய எடுகோள்கள் 15% மான அளவிலான அதிகரித் சேகரிப்ப ஒன்றிற்கான அனுமானத்தை வழங்குகின்றது. கொள்கை நடவடிக்கைகள் சிந்திக்கப்பட்ட அதிகரிப்பை ஏற்படுத்தும் என்ற மதிப்பீடானது ஏற்றுக்கொள்ளப்படால், (இது தொடர்பில் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ற்கு வழங்கப்பட்ட ஆதரவு தகவல்கள் அல்லது அனுமானங்கள் காணப்படவில்லை) வரவு செலவுத் திட்டத்தில் சிந்திக்கப்பட்ட 59% ற்கு மாறாக 25% க்கு குறைவான மொதத எதிர்ப்பார்க்கப்பட்ட அதிகரிப்புக்கு வழியமைக்கின்றது.

**அவதானிப்புகள்**

- உழைக்கும்போதே செலுத்தும் வரியின் 59 % ஒட்டுமொத்த அதிகரிப்பு எடுகோள்கள் மற்றும் எதிர்ப்பார்ப்புகளில் இருந்து பாரியவொரு மாற்றத்தை காட்டுகின்றது. அதனை வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகள் மற்றும் கடந்தகால அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் விளங்கிக் கொள்ளலாம்.

- சீராக்கப்பட்ட எடுகோள்களுக்கு காரணம் கூறும் முகமாக இலங்கை ரூபாயில் 12 பில்லியனால் மதிப்பீட்டில் கீழ் நோக்கியவாறு திருத்துவதற்கு நாம் ஆலோசனை தெரிவிக்கின்றோம். உழைக்கும்போதே செலுத்தும் வரியனை 22.5 % அதிகரிக்கக் கூடிய சாதகமான மதிப்பிட்டனை நோக்கசெல்லும்.இது 2009- 2014 காலப்பகுதியின் சராசரி விகிதமாகிய 8.3 வின் இரு மடங்காகும்.

### 1.3 பிடித்து வைக்கும் வரி (WHT)

| வருமான வகை | 2017 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள்( இலங்கை ரூபாய் பில்லியன்) | மொத்த வருமானத்தின் சதவீதம் | 2009-2014 வளர்ச்சி(கால அளவு சராசரி) | 2016 இலிருந்து அதிகரிப்பு (இலங்கை ரூபாய் பில்லியன்) | கொள்கை மாற்றங்களின் காரணமாக (இலங்கை ரூபாய் பில்லியன்) | சாதாரண வளர்ச்சி மற்றும் சிறந்த நிர்வாகம் காரணமாக இலங்கை ரூபாய் பில்லியன்) |
|---|---|---|---|---|---|---|
| பிடித்து வைக்கும் வரி | 84[2] | 4% | 14.9% | 16 | 26 | |

மூலம்: ஆண்டறிக்கை 20152016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள்

**எடுகொள்களும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும்**
**ஊகங்கள்:**
பிடித்துவைக்கும் வரியை அதிகரித்தமையினால் உருவாக்கப்பட்ட வருமானமானது கூட்டுறவு வருமான வரி மற்றும் வட்டி வருமானம் மீதான வரி ஆகியவற்றில் பிரதிபலிக்கப்பட்டுள்ளதாக தோன்றுகிறது. பிடித்துவைக்கும் வரி தொடர்பிலான கொள்கை மாற்றங்களின் காரணமாக மேலதிகமான இஙங்கை ரூபா 26 பில்லியன் வருமான வளர்ச்சி ஏற்பட்டதாக வரவுசெலவுத் திட்ட உரையில் மதிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை 2016.11.12 ஆம் திகதிய திறைசேரி மதிப்பீடுகளின் பிரகாரம் வட்டி வருமானம் மீதான வரி அதிகரிப்பின் காரணமாக இ.ரூபாய் 16 பில்லியன் கிடைக்கப்பெற்றது. இந்த வித்தியாசம் /வேறுபாடு தொடர்பில் பாராளுமன்றத்தில் விளக்கமளிக்கப்படல் வேண்டும்.

**நடவடிக்கைகள்:**

[2] 2017 ஆண்டு தொடர்பாக ரூபா 84 பில்லியன் மதிப்பீடு 2016.11.12 திகதிய மதிப்பீடுகளின் “வட்டி வருமானம் மீதான வரி” எனும் தலைப்பாக காட்டப்பட்டுள்ளது

தனிப்பட்ட வைப்புக்களுக்கான வட்டி வருமானம் மீதான நிறுத்தி வைத்தல் வரி 2.5% இலிருந்து 5% ஆக அதிகரித்தது. விஷேட கட்டணங்களுக்கான நிறுத்தி வைத்தல் வரி மாதமொன்றிற்கு இலங்கை ரூபா 50,000 விஞ்சுவது 5% ஆக அதிகரித்தது. அரச பிணைங்கள், கூட்டு கடன் பிணையங்கள் என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட நிறுத்தி வைத்தல் வரி 10% இலிருந்து 14% ஆக அதிகரித்தது.

**பகுப்பாய்வு**

2009-2014 வரையிலான கடந்த காலப்பகுதியின்பொழுது பிடித்துவைக்கும் வரி தொடர்பிலான சராசரி வளர்ச்சி 15% ஆகும். 2017 இல் பிடித்துவைக்கும் வரி தொடர்பில் மதிப்பிடப்பட்ட வளர்ச்சி 24% ஆகும். இந்த உயர் மதிப்பீட்டை சாத்தியப்பாடுள்ளதாக மாற்றுவதற்கு பல காரணிகள் பங்களிப்புச் செய்தன. அவையாவன வைப்புகள் மீதான பிடித்துவைக்கும் வரி விகித அதிகரிப்புகள் , பிடித்துவைக்கும் வரி விதிவிலக்குகளை அகற்றுவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக நடவடிக்கைகள் , பெயரளவிலான அடிப்படை விரிவாக்கம் சுமார் 10% , 2016 உடன் ஒப்பிடுகையில் 2017 இல் கூடிய வட்டி வீதமாகும்.

**அவதானிப்புகள்**

எடுகோள்கள் மற்றும் குறிப்பிட்ட செயல்கள் தொடர்பில் கருதப்பெற்ற 24% பிடித்துவைக்கும் வரி வருமான வளர்ச்சியானது இயலக்கூடியதாக காணப்பட்டது.

## 2 உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள்

### 2.1 சேர் பெறுமதி

| வருமான வகை | 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் | மொத்த வருமான சதவீதம் | 2009-2014 சராசரி வளர்ச்சி | 2016 இல் இருந்து அதிகரிப்பு (இலங்கை பில்லியன்) | கொள்கை மாற்றங்கள் காரணமாக (இலங்கை பில்லியன்) | சாதாரண வளர்ச்சி மற்றும் சிறந்த நிருவாகம் காரணமாக (இலங்கை பில்லியன்) |
|---|---|---|---|---|---|---|
| சேர் பெறுமதி வரி | 380 | 18% | 3.5% | 65 | 45 | 20 |

2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2015

**தரப்பட்டுள்ள எடுகோள்களும் நடவடிக்கைகளும்**

**எடுகோள்கள்:**

2016.11.12 ஆம் திகதிய திரைசேரி மதிப்பீடுகளின்[3] பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் 315 பில்லியன் இலங்கை ரூபாயிருந்து 2017 ஆம் ஆண்டின் 380 பில்லியன் இலங்கை ரூபாய் வரையிலான சேர் பெறுமதி வரி (VAT) வருமானத்தின் அதிகரிப்பு 65 பில்லியன் ரூபாய் ஆகும்

**நடவடிக்கைகள்**

வரவுசெலவுத் திட்டத்தில் புதிய சேர் பெறுமதி தொடர்பான மாற்றங்கள் இல்லாதிருந்த அதேவேளையில் வரவு-செலவுத் திட்டத்திற்கு முன் உடனடித் திருத்தங்களான சேர் பெறுமதி வரி 11 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டமை, முதனிலை காலாண்டு ஒன்றிற்கு 3.75 மில்லியன் இலங்கை ரூபாயிலிருந்து காலாண்டு ஒன்றிற்கு 3 மில்லியன் இலங்கை ரூபா ஆகக் குறைக்கப்பட்டமை ஆகியன இடம்பெற்றது. மதுபானம், சிகரட்டுக்கள் மற்றும் பால்மா உட்பட சில சேர் பெறுமதி வரி விலக்களிப்புக்களும் நீக்கப்பட்டன.

**பகுத்தாய்வு:**

2016 ஆம் ஆண்டின் பெருமளவு பகுதி மற்றும் 2015 ஆம் ஆண்டில் சிகரட்டுகள் போன்ற உயர் பெறுமதி விற்பனைகளுக்கான சேர்பெறுமதி வரி விலக்களிக்கப்பட்டமையால் கடந்த சில ஆண்டுகளின் மீதான சேர்பெறுமதி வரிக் கணிப்பீடு சிக்கலாக்கப்பட்டுள்ளது. சேர்பெறுமதி வரி 2015 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை 40 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரிக்கப்பட்டிருந்தது எனும் எதிர்வு கூறுகைகளில் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டின் மேலாக 2017 ஆம் ஆண்டிற்கென விதிக்கப்பட்டுள்ள சேர்பெறுமதி வரியின் 20 சதவீத அதிகரிப்பு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் யாதெனில், 2015 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட சேகரிப்பின் மீது ஏறத்தாழ 75 சதவீதத்திலும் கூடுதலாக உள்ள 2017 ஆம் ஆண்டிற்கான சேர் பெறுமதி வரி சேகரிப்பாக வரவு செலவுத் திட்டம் அனுமானித்தும் கொண்டிருக்கின்றது. சிகரட்டுகள் போன்ற உயர்பெறுமதியுடைய பொருட்கள் மீதான சேர்பெறுமதி வரி விலக்களிக்கப்பட்டதுடன் பதிலாக அதன் பெறுமதியில் சில கலால் வரிகளின் அதிகரிப்பொன்றினால் கைப்பற்றப்பட்டமையினாலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் சேர்பெறுமதி வரியாக இழக்கப்பட்ட வருமானத்தையே மிக உயர்வான அதிகரிப்புகள் பிரதிபலிக்கிறது. இறுதி மதிப்பீடுகளுக்கான நியாயம் காட்டுதலானது சேர்பெறுமதி வரி வீதத்தின் 37 சதவீத அதிகரிப்புக்கான கொள்கை நடவடிக்கையினால் செயலாக்கம் பெறுகிறது. 2016 ஆம் ஆண்டுக்கான முதல் 09 மாதங்களின் மாதாந்த சேர்பெறுமதி வரி சேகரிப்பு 11 சதவீதம்

எனும் அடிப்படையில் சராசரியாக 21.7 பில்லியன் இலங்கை ரூபாய் ஆகும். இந்த வீதம் 15 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டால், அது வருடந்தோறும் 2016 ஆம் ஆண்டிற்கென 355 பில்லியன் இலங்கை ரூபாய் எனும் தொகையை வழங்கும். சேர்பெறுமதி வரியின் 60 சதவீதமானது உள்ளூர் பொருளாதாரத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படுவதுடன் அது பெயரளவிலான காலப்பகுதிகளில் 10 சதவீதமாக அதிகரிக்கும் என அனுமானிக்கப்படமுடிந்தபோதிலும் சேர்பெறுமதி வரியின் 40 வீத இறக்குமதி சேர்பெறுமதி வரியாகவும் இறக்குமதிகள் மாற்றமின்றிய நிலையிலும் உள்ளன. இத்தகைய கணிப்பீடுகள் 375 பில்லியன் இலங்கை ரூபாயை விட கூடுதலான சேர்பெறுமதி வரி மீதான மதிப்பீட்டை ஏற்கனவே வழங்கியிலிருந்தன. எனவே, விலக்களிப்புகளின் நீக்கத்துடன், சேகரிப்பு மற்றும் நிருவாகம் வினைத்திறனுடன் தொழிற்பட்டிருப்பின், சேர்பெறுமதி வரி வருமானம் எதிர்வுகூறப்பட்ட 380 பில்லியன் இலங்கை ரூபாயை விட அதிகளவு செயலாற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட முடியும்.

**குழு அவதானங்கள்:**

[3] வரவு – செலவுத்திட்ட மதிப்பீட்டு வரைவு, 2016 (I-III தொகுதிகள்) ஆண்டின் சேர்பெறுமதி வரி வருமானம் 270 பில்லியன் இலங்கை ரூபாயாக உள்ளது.

ஆரம்ப கண்ணோட்டத்தில் சேர்பெறுமதி வரி வருமான வளர்ச்சி (2015 ஆம் ஆண்டின் மீதான ஏறத்தாழ 75% அதிகரிப்பு) எதிர்பார்க்கையானது அதிகமாய் உள்ளது போலிருக்கிறது. எனினும், 2016 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளுக்குமென அறிக்கையிடப்பட்ட சேகரிப்புகள், சேர்பெறுமதி வரியின் வீதங்கள் மற்றும் பிரயோகத்தன்மை மீது மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் ஆகியவற்றைப் பரிசீலிக்கையில், இந்த அதிகரிப்பானது அரசாங்கத்தின் அனுமானங்கள் மற்றும் கொள்கை நிலைமையினுள் நியாயமானதாயிருக்கக் கூடியது மாத்திரமின்றி 10 பில்லியன் இலங்கை ரூபாயினால் உள்ளார்ந்த ரீதியில் குறைமதிப்பீடு செய்யப்படுகின்றது.

## 2.2 உற்பத்தி வரி (Excise Duty)

| வருமான வகை | 2017 வரவு-செலவுத் திட்டம் | மொத்த வருமானத்தின் சதவீதம் | 2009-2014 அதிகரிப்பு (காலப் பகுதிக்கான சராசரி) | 2016 ஆம் ஆண்டிலிருந்தான அதிகரிப்பு (பில்லியன் இலங்கை ரூபா) | கொள்கை மாற்றங்களுக்கு உட்படும் தன்மை/காரணங்கள்(பில்லியன் இலங்கை ரூபா) | சாதாரண மற்றும் சிறந்த நிருவாகத்திற்கு உட்படும் தன்மை/காரணங்கள் (பில்லியன் இலங்கை ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி | 575 | 28% | 19% | 131 | - | - |
| மோட்டார் வாகனம் | 230 | 11% | 9% | 50 | 14 | 36 |
| மதுபானம் | 180 | 9% | 18% | 50 | 8.5 | 41.5 |
| சிகரட்டுக்கள் | 105 | 5% | 8% | 20 | - | - |
| பெற்றோலியம் | 55 | 3% | 9% | 10 | - | - |

மூலம் : திறைசேரித் திணைக்களத்தினது 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகளும் ஆண்டறிக்கையும்
இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2015

**தரப்பட்டுள்ள எடுகோள்களும் நடவடிக்கைகளும்**

**எடுகோள்கள்:**
வரவு – செலவுத் திட்ட உரையில் கலால் வரிகளிலிருந்து (Excise) கிடைக்கப்பெறும் வருமானம் 131 பில்லியன் இலங்கை ரூபாயிலிருந்து 575 பில்லியன் இலங்கை ரூபாய் வரை (29% வளர்ச்சி)[4]

[4] இருப்பினும் வரவு செலவுத்திட்ட வரைபில் உற்பத்தி வரி இ.ரூ.80 பில்லியனால் அதிகரிக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த 80 வீத அதிகரிப்பானது வாகன உற்பத்தி வரியிலிருந்து 40 பில்லியனும் கலால்

அதிகரிப்பிற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வரவு செலவுத்திட்ட உரையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அதிகரிப்பானது மோட்டார் வாகனங்கள் மற்றும் மதுபானம் ஆகியவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் 50 பில்லியன் இலங்கை ரூபாய், புகையிலிருந்து கிடைக்கப்பெறும் 30 பில்லியன் மற்றும் பெற்றோலியத்திலிருந்து கிடைக்கப்பெறும் 10 பில்லியன் இலங்கை ரூபாய் அதிகரிப்புக்களை அடிப்படையாகக் கொண்டது.

**நடவடிக்கைகள்:**

மதுபானம், புகையிலை ஆகியவற்றின் மீதான அனுமானங்கள், வரவு செலவுத் திட்டம் வரை இட்டுச் செல்லும் கலால் வரி வீதங்கள், இறக்குமதி செய்யப்பட்ட எதனோல் மீதான புதிய கலால் வரிகள் (கலால் வரி வருமானத்தில் 8.5 பில்லியன் இலங்கை ரூபாயை ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது), சம்பந்தப்பட்ட இறக்குமதி உள்ளீடுகள் ஆகியவற்றின் அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். சில மோட்டார் வாகன இறக்குமதிகளின் (3000 சீ சீ கொள்ளளவை விட அதிகம் கொண்ட ஹைபிரிட்டுகள், மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள்) உற்பத்தித் தீர்வைகள் மீதான கீழ்நோக்கிய திருத்தங்களினால் கேள்வி பிரதியீட்டு முறை மூலமான குறைப்புச் செய்யப்பட்ட வீதங்களுக்காக வினைத்திறனுடன் கூடிய மிகை ஈடுசெய்யும் அதிகரிக்கப்பட்ட கேள்வி மூலமாக வருமான அதிகரிப்பில் 14 பில்லியன் இலங்கை ரூபா கிடைக்கப் பெறுதல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**பகுத்தாய்வு:**

கடந்த காலத்தில் தற்போதுள்ள மோட்டார் வாகனங்களின் மீதான தீர்வை அதிகமாக காணப்பட்ட போது, பிரயோகிக்கப்படக்கூடிய தீர்வைகளில் உள்ள குறைப்பு கேள்வி மீது மிகை ஈடு செய்யும் அதிகரிப்பு ஒன்றிற்கு இட்டுச் சென்றுள்ளதுடன் வருமானம் அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டிற்கான அதே நிலைமையை குறித்த வாகன வகைகளில் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.உற்பத்தி வரி வருமானத்தில் நிலுவை அதிகரிப்பான 36 பில்லியன் இலங்கை ரூபாவிற்கு இட்டும் செல்லும் மோட்டார் வாகனங்களின் இறக்குமதியில் உள்ள முழு அதிகரிப்பொன்றையே வாகன இறக்குமதி உற்பத்தி தீர்வை வருமானத்தில் உள்ள அதிகரிப்பு பற்றிய வரவு செலவுத் திட்ட உரையும் அனுமானிக்கிறது. மோட்டார் வாகன இறக்குமதிகளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமான அதிகரிப்பின் இத்தகைய எதிர்பார்ப்புகளை மதிப்பீடு செய்வதில் பல பகுத்தாய்வு ரீதியிலான பரிசீலனைகள் காணப்படுகின்றன:

- 2015 ஆம் ஆண்டில் மோட்டார் வாகன இறக்குமதிகளில் என்றும் எதிர்பாராத அளவிலான அதிகளவு அதிகரிப்பு (உற்பத்தி வரி வருமானமாக 223 பில்லியன் இலங்கை ரூபாய் அளவிற்கு இட்டுச் செல்கின்றது) காணப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டில் (முதல் 10 மாதங்கள்) உள்ள வாகன இறக்குமதி வளர்ச்சியை 2014 ஆம் ஆண்டுடன் (10 மாதங்கள்) ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் 24% வளர்ச்சியை வெளிப்படுத்தி ஆரோக்கியமான வலுவுள்ள அதிகரிப்பாக பரிந்துரைக்கிறது. கொள்கை மாற்றங்களுக்கான பதில் நடவடிக்கை மேற்கொள்கையில்) வாகன இறக்குமதிகளுக்கான கேள்வி சுழற்சி முறையில் அதிகரிப்பதனால், கடந்த இரண்டு வருடங்களுக்கான இந்த வளர்ச்சியை 2017 ஆம் ஆண்டில் நிலைத்து நிற்கச் செய்ய முடியும் என்பது சாத்தியப்படாது.

- வாகனக் குத்தகை, மற்றும் வாகனக் கடன்களுக்கான குறைந்தளவு கடன் பெற்றுக்கொள்ளுதலுக்கு இட்டுச் செல்லும் (70 சதவீதத்திலிருந்து) 50 சதவீதம் வரை மோட்டார் வாகனங்களுக்கான கடன் மற்றும் பெறுமதிக்கிடையிலான விகிதத்தை (LTV) குறைப்புச் செய்யுமாறு வரவு செலவுத் திட்டத்தில் பிரேரிக்கப்பட்டுள்ளது. இது உயர்படுகடன் உணர்திறன்மிக்க உற்பத்தியிலான வாகனங்களுக்குரிய குறைந்த கேள்விக்கு அவசியமாக

வரியிலிருந்து  பில்லியனும், புகையிலை வரியிலிருந்து 10 பில்லியனும் பெற்றோலிய வரியிலிருந்து  5 பில்லியனும் ஆகும்

இட்டுச் செல்வதென்பதாகும். மேலும் 2017 ஆம் ஆண்டுக்கான மோட்டார் வாகன கேள்வி தொடர்பில் மட்டுப்படுத்தும் உயர் வட்டி வீத ஆட்சி தொடர்ந்து செல்லும்.

அதிகரித்துச் செல்லும் வருமானம் மற்றும் விருப்புகளுடன் கேள்வி குறைக்கப்படுவது மிகவும் சாத்தியமாக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் மோட்டார் வாகன இறக்குமதிகளிலிருந்து கிடைக்கப்பெறும் கலால் வரி 2016 ஆம் ஆண்டை ஒத்ததாக அமையும் என இத்தகைய காரணிகள் சுட்டிக்காட்டுகின்றன. 2016 ஆகஸ்ட் மாதத்தில் பியர் மீதான 5% வரி அதிகரிப்புடன் மதுசாரத்தினது கலால் வரிகள் சிறிதளவு அதிகரிக்கப்பட்டன.

எனினும், மதுசாரத்திலிருந்து கிடைக்கப்பெறும் கலால் வரி அதிகரிப்பிற்கான மதிப்பீடு 2017 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட எதனோல் மீதான கலால் வரி அதிகரிப்புகளிலிருந்து கிடைக்கப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மேலதிக வருமானத்தையும் விட 32 சதவீதத்தினால் அதிகரிக்குமென திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் கலால் வரியின் சாராசரி வருடாந்த அதிகரிப்பு வீதங்கள் 18 சதவீதமாக காணப்பட்டுள்ளது (அது 2014 ஒக்தோபர் மற்றும் 2015 ஒக்தோபர்/நவம்பர் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட பல தீர்வைத் திருத்தங்களின் மீதான 2015 ஆம் ஆண்டின் 52 சதவீத அதிகரிப்பை உள்ளடக்குகிறது.)

வேறு விதமாகக் கூறின், புதிய கலால் வரிகளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமான அதிகரிப்பாகிய 8.5 பில்லியன் இலங்கை ரூபாயுடன் மதுசாரத்தின் மீதான உற்பத்தி வரியில் 15% அதிகரிப்பை வழங்குவதனால், 2016 ஆம் ஆண்டிற்கான 130 பில்லியன் இலங்கை ரூபாயிலிருந்து 2017 ஆம் ஆண்டிற்கான 158 பில்லியன் இலங்கை ரூபாய் வரையில் அதிகரிப்பு கிடைக்கப்பெறும் .

**அவதானங்கள்:**

- 2017 ஆம் ஆண்டில் வாகன இறக்குமதிகள் அதிகரித்துச் செல்வதுடன் அதிகரிகப்பட்ட வருமானத்தையும் ஏற்படுத்தும் எனும் அனுமானமானது, வரவு – செலவுத் திட்டத்தில் வெளிக்காட்டியுள்ள தகவல்கள், எடுகோள்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றுடன் இணங்கியொழுகவில்லையாயினும் பொருளாதாரச் சூழல், மற்றும் சம்பந்தப்பட்ட கொள்கை மாற்றங்கள் தொடர்பான பகுத்தாய்வு வேறுவிதமாக கிடைக்கப்பெறல் வேண்டும்; அதேவேளையில் அது சாத்தியமாகும் போதிலும் வாகன வகைகளுக்கிடையிலான தொடர்புடைய வரி வீதங்களின் மாற்றங்கள் காரணமாக கேள்வி பதிலீடு காணப்படல் வேண்டும்.
- எனவே, 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகளின் எதிர்பார்க்கப்பட்ட 230 பில்லியன் ரூபாய் நியாயமானதாக இருப்பதற்குரிய போதியளவு ஆதரவளிப்பு இல்லை. எனவே, திட்டமிடப்பட்டவைகள் அதிகளவில் மிகை மதிப்பீடு செய்யப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு இத்தகைய கணிப்பீடுகள் மீள மதிப்பீடு செய்யப்படுவதுடன் ஆகக் குறைந்தளவான 15 சதவீதத்தினால் கீழ் நோக்கிய வண்ணம் திருத்தம் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனவும் இந்த குழு சிபாரிசு செய்கிறது.
- மதுபானத்திற்கான அதிகரிக்கப்பட்ட கேள்வியில் 32 சதவீத அதிகரிப்பு கலால் வரியிலிருந்து 180 பில்லியன் இலங்கை ரூபாய் வரை வருமானம் அதிகரிக்கின்றது பற்றி கடந்த கால தரவுகளுடன் வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் நடவடிக்கைகளுடன் நியாயப்படுத்துவது கடினமாகவுள்ளது. இந்த விடயத்திலும் திட்டமிடப்பட்டவைகள் அதிகளவில் மிகை – மதிப்பீடு செய்யப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு இத்தகைய கணிப்பீடுகள் மீள மதிப்பீடு செய்யப்படுவதுடன் ஆகக் குறைந்ததளவான 15% ஆல் கீழ்நோக்கிய வண்ணம் திருத்தம் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனவும் குழு சிபாரிசு செய்கிறது.
- 2017 ஆம் ஆண்டில் வருமானம் கண்காணிப்புச் செய்யப்பட்டு கலால் வரி வீதங்கள் ஒழுங்கு முறையில் சீராக்கல் செய்யப்பட்டிருப்பின், சிகரட்டுகளுக்கான வருமான மதிப்பீடுகள் (105 பில்லியன் இலங்கை ரூபாய்) நியாயப்படுத்தப்படக் கூடியன. பெற்றோலியத்திற்கான

மதிப்பீடுகளும் (55 பில்லியன் இலங்கை ரூபாய்) கிடைக்கப் பெறும் எடுகோள்கள் மற்றும் தகவல்களினுள் உள்ளடக்கப்படுகின்றன.

- வரவு செலவுத் திட்ட உரையில் சமர்ப்பிக்கப்பட்ட 575 பில்லியன் ரூபாயை விட குறிப்பிடத்தக்க அளவு குறைவானதாக மொத்த கலால் வரியின் கீழ் நோக்கிய திருத்தமாகிய ஏறத்தாழ 515 பில்லியன் இலங்கை ரூபாவிற்கு மேற்கொள்ளப்படல் வேண்டுமென இத்தகைய அவதானங்கள் குறிப்பிடுகின்றன.

2. **வெளிவாரி வர்த்தகத்தின் மீதான வரிகள்:**

### 3.1 இறக்குமதியை அடிப்படையாகக் கொண்ட வரிகள்

| வருமான வகை | 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் | மொத்த வருமானத்தின் சதவீதம் | 2009-2014 அதிகரிப்பு (காலப் பகுதிக்கான சராசரி) | 2016 ஆம் ஆண்டிலிருந்தான அதிகரிப்பு (பில்லியன் இலங்கை ரூபா) | கொள்கை மாற்றங்களுக்கு உட்படும் தன்மை/காரணங்கள்(பில்லியன் இலங்கை ரூபா) | சாதாரண மற்றும் சிறந்த நிருவாகத்திற்கு உட்படும் தன்மை/காரணங்கள் (பில்லியன் இலங்கை ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| இறக்குமதி வரி/ செஸ்வரி | 225 | 11% | 5.80% | 35 | 0 | 35 |

ஆதாரம் : 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகளும் -இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2015

**தரப்பட்ட எடுகோள்களும் நடவடிக்கைகளும்**

**எடுகோள்கள்:**

2017 ஆம் ஆண்டில் வருமானமாக 225 பில்லியன் இலங்கை ரூபாய் கிடைக்கப் பெறுவதற்கு, இறக்குமதித் தீர்வை மற்றும் செஸ் வரியிலிருந்து 18 சதவீத வருமான அதிகரிப்பு வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. 2016 ஆம் ஆண்டில் இணைந்துவரும் அதிகரிப்பு 6 சதவீதமாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் வருமான அதிகரிப்பு எடுகோளானது 7 சதவீத இறக்குமதி அதிகரிப்பின் மீது எதிர்வுகூறப்பட்டுள்ள போதிலும் 2016 ஆம் ஆண்டின் முதல் 07 மாதங்களில் இறக்குமதிகள் 3 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**நடவடிக்கைகள்**:

இறக்குமதித் தீர்வையில் நிலையான மாற்றங்கள் இங்கு இல்லாததோடு அரசாங்கம் செஸ் அறவீடுகளை படிப்படியாக நீக்குவதற்குத் திட்டமிடுகிறது. நிதி அமைச்சர் 100 பண்டங்களின் மீதான செஸ் வரியை நீக்குவதற்கு பிரேரித்துள்ளார்.

**பகுப்பாய்வு**:

2017 ஆம் ஆண்டில் இறக்குமதிகள் உள்ளடக்கப்பட்டு அவ்வாறே காணப்படும் சாத்தியமான நிலையுடன் 2017 ஆம் ஆண்டில் தொடருவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள உயர் வட்டிவீத ஆட்சி மூலம் அதிகரிக்கப்பு தளர்ச்சியடைவதையும் பொருளாதாரச் சூழல் வெளிக்காட்டுகிறது. நிதி நிலைமைகளும் இறுக்கமாக உள்ளதோடு வெளிநாட்டு நாணயமாற்று வீதம் பொருளாதார அடிப்படைகளுக்கு இணங்க சாதாரண சராசரி வீதங்களில் தேய்மானமடைவதற்கு எதிர்பார்க்கப்படலாம். சர்வதேச வர்த்தகப் பண்டங்களின் விலைகள், தரப்பட்ட தளர்வான சர்வதேச கேள்வி நிபந்தனைகளில், நடுத்தர நிலையில் அவ்வாறே நிலைத்திருக்கும் சாத்தியம் காணப்படும்.

வரி வீத மாற்றங்கள் மற்றும் பிரயோகத்தின் பிரகாரம், இறக்குமதி வரி, செஸ் வருமானம் ஆகியவற்றில் நடைமுறை அதிகரிப்பொன்றை எதிர்பார்ப்பதற்குரிய ஏதேனும் காரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இறக்குமதி வரி மற்றும் செஸ் அதிகரிப்பு மீதான திருத்தியமைத்த எடுகோளானது மேம்படுத்திய நிருவாக நடைமுறைகளினடிப்படையில் 5 சதவீதமாகும். இது திருத்தியமைத்த வருமான மதிப்பீடான 200 பில்லியன் இலங்கை ரூபாயாக அமை

**அவதானிப்புகள்**

இறக்குமதித் தீர்வை மற்றும் செஸ் ஆகியவற்றில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி, சேகரிப்பை விரிவுபடுத்தும் நிருவாக நடவடிக்கைகளின் மேம்பாடுகளைச் சார்ந்துள்ளது. 100 பொருட்களின் மீது முன்மொழியப்பட்டுள்ள செஸ் குறைப்பு இவ்வாண்டு காலப்பகுதியினுள் அமுலாக்கப்பட்டால், இம்மதிப்பீட்டை விட செஸ் இலிருந்து பெறப்படும் வருமானம் குறைவடையலாம். பகுப்பாய்வின் அடிப்படையில் வருமான மதிப்பீட்டில் ஆகக்குறைந்தது 25 பில்லியனால் குறைப்பொன்றை மேற்கொள்ளுதல் சிறந்தது.

## 3.2 துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (PAL) மற்றும் விசேட வியாபாரப்பண்ட அறவீடு (SCL)

| வருமான வகை | 2017 வரவு செலவுத் திட்டம் | மொத்த வருமானத் தின் சராசரி | 2009 – 2014 வளர்ச்சி (காலப்பகுதியின் சராசரி) | 2016 இலிருந்து அதிகரிப்பு (ரூபா பில்லியன்) | கொள்கை மாற்றங்களுக்கு உரித்தாக்கப்பட்டது (ரூபா பில்லியன்) | சாதாரண வளர்ச்சி மற்றும் சிறந்த நிருவாகம் ஆகியவற்றிற்கு உரித்தாக்கப்பட்டது (ரூபா பில்லியன்) |
|---|---|---|---|---|---|---|
| PAL/SCL | 175 | 8% | 16% | 23 | 5 | 18 |

மூலம்: வருடாந்த அறிக்கை 2015, இலங்கை மத்திய வங்கி, வரவுசெலவுத்திட்ட உரை 2017,வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் (வரைவு) 2017 ; நிதியமைச்சு

**வழங்கப்பட்டுள்ள அனுமானங்கள் மற்றும் நடவடிக்கைகள்**

**அனுமானங்கள்:**

துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (PAL) மற்றும் விசேட வியாபாரப்பண்ட அறவீடு (SCL) மூலம் பெறப்படும் ரூபா 5 பில்லியன் வருமான அதிகரிப்பொன்று (சீனி இறக்குமதிகளின் மீதான SCL அதிகரிப்பின் காரணமாக) உள்ளடங்கலாக, ரூபா 175 பில்லியன் வருமானமொன்றை வழங்கக்கூடிய 15% PAL வருமான வளர்ச்சியை வரவுசெலவுத்திட்டம் அனுமானிக்கின்றது.

**நடவடிக்கைகள்:**

துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு வீதம் மற்றும் பிரயோகத்தில் முக்கிய மாற்றங்கள் எதுவுமில்லை, இதனால் இவ்விடயத்திலிருந்து பெறப்படும் வருமான வளர்ச்சி, இறக்குமதியின் வளர்ச்சியைப் படமிடுவதுடன் வருமான நிருவாகத்தின் அபிவிருத்திகளைப் பிரதிபலிக்க வேண்டியிருக்கும்.

**பகுப்பாய்வு**

பிரிவு 3.1 இல் கலந்துரையாடப்பட்டவாறு, குறிப்பிடத்தக்க இறக்குமதி வளர்ச்சிக்குப் பொருளாதார சூழல் உகந்ததாகாது என்பதுடன் 2017 ஆம் ஆண்டின் இறக்குமதிகள் 2016 இன் மட்டத்திற்கு மேல் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடையாதிருத்தல் நிகழலாம்.
துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு வளர்ச்சிக்கான மீளாய்வு செய்யப்பட்ட அனுமானமொன்று 5% ஆகக் காணப்படுமென்பதுடன், 2017 இல் PAL மற்றும் SCL ஆகியற்றிலிருந்து பெறப்படும் வருமானம் ரூபா 160 பில்லியனாக அதிகரிப்பதற்கு வழிவகுக்கும்.

**அவதானிப்புகள்**

வெளியகத் துறையின் மீதான பகுப்பாய்வு மற்றும் குறிப்பாக 2017 இன் மிதமான இறக்குமதி வளர்ச்சி ஆகியவற்றைப் பரிசீலனை செய்யும்போது, 15% PAL வளர்ச்சியொன்று மிகை மதிப்பீடொன்றாக அமைதல் நிகழக்கூடும். 2017 இல் தட்டையான வருமான வளர்ச்சியை அனுமானித்து, PAL இனால் பெறப்படும் வருமானத்தை நிருவாக மேம்பாடுகளினால் ஊக்குவிக்க வேண்டியிருக்கும். பகுப்பாய்வின் அடிப்படையில் வருமான மதிப்பீட்டில் ஆகக்குறைந்தது 10 பில்லியனால் குறைப்பொன்றை மேற்கொள்ளுதல் சிறந்தது.

**பிரிவு II: வரவுசெலவுத்திட்டத்திலுள்ள செலவின மதிப்பீடுகள்**

வருமான மதிப்பீடுகள் விடயத்தைப் போன்று, வரவுசெலவுத்திட்டத்தில் பாராளுமன்றத்திற்கும் மற்றும் இக்குழுவிற்கும் வழங்கப்பட்ட பல்வேறு எண்ணிக்கைகளில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட சில வித்தியாசங்கள் அட்டவணைகள் 4 மற்றும் 5 இல் தரப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் செலவினத்தில் ஏற்பட்ட உயர்வுகளை அட்டவணை 3 எடுத்துக் காட்டுவதுடன் அட்டவணை 6 கடந்த வருடங்கள் மற்றும் சராசரியின் அடிப்படையிலமைந்த மாற்றங்களின் பகுப்பாய்வை வழங்குகின்றது.

**அட்டவணை 3: 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் செலவின உயர்வுகள்**

| விடயம் | புதிய முன்மொழிவுகள் காரணமாக அதிகரிப்பு (ரூபா பில்லியன்) | மொத்த அதிகரிப்பு (ரூபா பில்லியன்) |
|---|---|---|
| பொருட்களும் சேவைகளும் | 18.4 | 31 |
| இடமாற்றங்கள் | 19.6 | 43 |
| சம்பளங்களும் வேதனங்களும் | | 25 |
| மூலதன செலவினம் | 87.8 | 207 |
| மொத்தம் | 139.9 | 389 |

I. மூலம்: வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் பிரிவு iii மற்றும் 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள், திறைசேரி மதிப்பீடுகள்

புதிய செலவின முன்மொழிவுகளின் அடிப்படையில், வரவுசெலவுத்திட்டத்தில் செலவீடுகள் ரூபா 140 பில்லியனால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படும் அதேவேளை மொத்த செலவினம் ரூபா 389 பில்லியனால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**அட்டவணை 4: வரவுசெலவுத்திட்ட உரை மற்றும் அரசாங்க செலவினத்திற்கான 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் ஆகியவற்றிலுள்ள வித்தியாசங்கள் (ரூபா பில்லியன்கள்)**

| விடயம் | வரவுசெலவுத்திட்ட உரை (ரூபா பில்லியன்) | நிதியமைச்சின் 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் (ரூபா பில்லியன்) | முரண்பாடு |
|---|---|---|---|
| மொத்த செலவினம் | 2,723 | 2,645 | 78 (2.9%) |
| மீண்டுவரும் (மேற்படி) | 2,024 | 1,946 | - 78 (4%) |
| மூலதனம்(மேற்படி) | 699 | 697 | -2 (0.2%) |

மூலம்: வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் (I-IIIதொகுதிகள்) மற்றும் 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள்

**அட்டவணை 5: அரசாங்க செலவினத்திற்கான பிரசுரிக்கப்பட்ட வரைபு வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் மற்றும் 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் ஆகியவற்றிலுள்ள வித்தியாசங்கள் (ரூபா பில்லியன்கள்)**

| விடயம் | வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் (ரூபா பில்லியன்) | திறைசேரி மதிப்பீடுகள் (ரூபா பில்லியன்) | முரண்பாடு |
|---|---|---|---|
| மொத்த செலவினம் | 2,534 | 2,645 | -111 (4.3%) |
| மீண்டுவரும்(மேற்படி) | 1,922 | 1,946 | -24 (1.2%) |
| மூலதனம்(மேற்படி) | 611 | 697 | -86 (14%) |

மூலம்: வரவுசெலவுத்திட்ட உரை (I-IIIதொகுதிகள்) மற்றும் 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள்

குறிப்பு: திறைசேரித் திணைக்களத்தின் 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் மற்றும் வரைபு வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் ஆகியவற்றுக்கிடையிலான செலவின வகைப்படுத்தல் ஒத்திசைவாகக் காணப்படாமையால் முரண்பாடுகள் மேலும் பிரிக்கப்பட்டுப் பகுப்பாய்வு செய்யப்பட முடியாதென்பது குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**அட்டவணை 6: கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் செலவினத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் பகுப்பாய்வு**

| | 2015 | 2016 | 2017 | 2016 வளர்ச்சி | 2017 வளர்ச்சி | 2011 – 2015 வளர்ச்சி (காலப்பகுதியின் சராசரி) | 2011 – 2015 அங்கீகரிக்கப்பட்டது எதிர் உள்ளபடியானது (காலப்பகுதியின் சராசரி) |
|---|---|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | **1702** | **1770** | **1946** | 4.0 | 9.9 | 11.9% | 1.05% |
| பொருட்களும் சேவைகளும் | 184 | 153 | 184 | (16.8) | 20.3 | 13.1% | -1.90% |
| சம்பளங்களும் வேதனங்களும் | 562 | 590 | 615 | 5.0 | 4.2 | 13.4% | -1.75% |
| **வட்டிக் கொடுப்பனவுகள்** | | | | | | | |
| வெளிநாட்டு | 77 | 113 | 123 | 46.8 | 8.8 | 23% | 49%[5] |
| உள்ளூர் | 450 | 490 | 557 | 8.9 | 13.7 | 6.6% | -1.70% |
| திறைசேரியின் மீதான | | | 130 | | | | |

[5] இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2015 இன் படி 2010-2015 வரை வெளிநாட்டு வட்டி செலுத்துகையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான மதிப்பீடு மீதான வித்தியாசம் 32% ஆகும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கழிவுகள் | | | | | | | |
| **மாற்றங்கள்** | **428** | **424** | **467** | | | | |
| குடும்ப நலனோம்புகை | 198 | 184 | 209 | (7.1) | 13.6 | 22% | 2.70% |
| ஓய்வூதியம் | 156 | 169 | 182 | 8.3 | 7.7 | 10.7% | -2.50% |
| பொதுக் கூட்டுத்தாபனங்களும் நிறுவனங்களும் | 87 | 85 | 90 | (2.3) | 5.9 | 23% | 1.90% |
| **மூலதன செலவினம்** | **588** | **490** | **697** | **(16.7)** | **42.2** | **13.6%** | -3.50% |
| உண்மையான சொத்துக்களை கைப்பற்றுதல் | 313 | 275 | 472 | (12.1) | 71.6 | 14.6% | -7.60% |
| மூலதன மாற்றங்கள் | 274 | 215 | 225 | (21.5) | 4.7 | 13.4% | -2.40% |

*மூலம்:* 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை 2015.

### 4. மீண்டுவரும் செலவினம்

### 4.1 சம்பளங்களும் வேதனங்களும்

| செலவின வகை | 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் 2017(ரூபா பில்லியன்கள்) | மொத்த செலவினத்தின் சதவீதம் | 2010 – 2015 வளர்ச்சி (காலப்பகுதியின் சராசரி) | 2016 இலிருந்து அதிகரிப்பு (ரூபா பில்லியன்கள்) | கொள்கை மாற்றங்களுக்கு உரித்தாக்கப்பட்டது (ரூபா பில்லியன்கள்) | சாதாரண வளர்ச்சி மற்றும் சிறந்த நிருவாகம் ஆகியவற்றிற்கு உரித்தாக்கப்பட்டது (ரூபா பில்லியன்) |
|---|---|---|---|---|---|---|
| சம்பளங்களும் வேதனங்களும் | 615 | 23.25% | 13.05% | 25 | N/A | 25 |

மூலம்:2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை 2016

**ஊகங்களும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்.**

**ஊகங்கள் :**

சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் மீதான செலவினம் 4.2% ஆல் அதிகரிக்கும் என மதிப்பிடப்படுகிறது.

**நடவடிக்கைகள் :**

வரவுசெலவுத்திட்ட உரையின் பிரகாரம் சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் அல்லது பணியாட்தொகுதி பதவியணி என்வற்றில் அதிகரிப்பிற்கான எவ்வி குறிப்பீடும் இல்லை. இந்தச் சூழமைவில் 4.2% மதிப்பிடப்பட்ட அதிகரிப்பு (25 பில்லியன் இலங்கை ரூபா) சாதாரண வளர்ச்சியை எடுத்துக்காட்டமுடியும்.

பகுப்பாய்வு :

சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் மீதான செலவினத்தின் சராசரி வருடாந்த வளர்ச்சி 2010 - 2015 இல் 13.1% ஆகும். வரலாற்று ரீதியாக 2010 - 2015 காலப்பகுதியின்பொழுது அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கும் உண்மை நிலைக்கும் இடையிலான சராசரி வருடாந்த விலகல் 1.75% ஆக இருந்துள்ளது.

எவ்வாறாயினும், பல புதிய நிறுவனங்கள் வரவுசெலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளன. இந்த முனைப்புக்களுக்கு, விசேடமாக பணியாட்தொகுதியின் தேவைப்பாடுகள், தொழில்வாண்மை மற்றும்

போட்டி ஈடுசெய்கையுடன் சம்பந்தப்படுவதாக இருப்பதால் இம்முனைப்புக்களுக்கு எவ்வாறு நிதியீட்டம் செய்யப்படும் என்பது மீதான தெளிவு இல்லை.

இவ்வரவுசெலவுத்திட்ட வகைப்பாட்டின் ஒரு மதிப்பீட்டிற்காக 2017 இல் அரசாங்க பணியாட்தொகுதியின் பணிநிலைப்பிரிவு எந்தளவுக்கு மாறுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது எனவும், 2017 இல் அமுல்படுத்தப்படவிருக்கும் மிகுதியான சம்பளப்படிகளின்/அதிகரிப்புக்களின் பரிமாணம் பற்றியும் கடந்த வரவுசெலவுத்திட்ட வாக்குறுதிகளிலிருந்து ஏதும் இருப்பின் அவற்றை விளக்கம் செய்வது அவசியமானது.

**அவதானிப்புக்கள் :**

- கடந்த ஆண்டுகளில் (2010 - 2015) முன்னைய வரவுசெலவுத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் உண்மை நிலைமைகளுக்கு இடையிலான விலகல்கள் தொடர்பாக நியாயமான முறையில் செவ்வையானதாக இருந்துள்ளது.
- பணியாட்தொகுதியின் பதவியணியில் எந்தவிதமான அதிகரிப்புகளும் இல்லை. 4 வீத சம்பள அதிகதிப்பு மாத்திரமே வழங்கப்பட்டது என்ற கிடைக்கக்கூடிய தகவல்களை அடிப்படையாகக்கொண்டு அனுமானிக்க முடியுமாயின் இவ்விடயத்தில் வரலாற்று சராசரியோடு காணப்பட்டபொழுதிலும் அதிகரிக்கப்பட்ட செலவினங்கள் யதார்த்த ரீதியானவை என கருதுவதற்குரிய வேறு எந்தக் காரணங்களும் இல்லை.
- கடந்த வரவுசெலவுத்திட்ட வாக்குறுதிகளிலிருந்து மிகுதியாகவுள்ள கடப்பாடுகள் தொடர்பாகவும், 2016 நடுப்பகுதியில் அமுல்படுத்தப்பட்ட சம்பள அதிகரிப்புகளின் பின்விளைவுகளாகவும் எவ்வாறாயினும் அதிக தகவல்கள் தேவைப்படுகின்றன. அந்த அதிகரித்த தகவல்களின் அடிப்படையில் இந்த செலவின அதிகரிப்புகள் மீள் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

**4.2 பொருட்களும் சேவைகளும்**

| செலவின வகை | 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் (இல. ரூபா பில்லியன்களில்) | மொத்த செலவினத்தில் வீதம் | 2010 - 2015 வளர்ச்சி (காலப்பகுதி சராசரி) | 2016 இலிருந்து அதிகரிப்பு (இல. ரூபா பில்லியன்களில் | கொள்கை மாற்றங்களுக்கு உரியது (இல. ரூபா பில்லியன்களில் ) | சாதாரண வளர்ச்சி மற்றும் சிறந்த நிர்வாகத்திற்கு காட்டப்படுவது |
|---|---|---|---|---|---|---|
| பொருட்கள் சேவைகள் | 184 | 6.9% | 13.09% | 31 | 18.4 | 12.6 |

மூலம்: 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் மற்றும் 2015 ஆண்டின் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை

**ஊகங்களும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்**

**ஊகங்கள் :** பொருட்கள் சேவைகள் மீதான செலவினம் 20.3% ஆல் அதிகரிக்கும் என மதிப்பிடப்படுகிறது. அதேவேளையில் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான செலவின் வருடாந்த

வளர்ச்சி 2010 - 2015 காலப்பகுதியில் 13.1% சராசரியாகவுள்ளது. வரலாற்று ரீதியாக 2010 - 2015 காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கும் உண்மை நிலைகளுக்கும் இடையிலான விலகல் 1.7% சராசரி வருடாந்த விலகலாகவுள்ளது[6].

**நடவடிக்கைகள் :** பொருட்கள் சேவைகள் மீதான செலவினம் 59% ஆக (18.4 பில்லியனிலிருந்து 31 பில்லியனாக) அதிகரித்துள்மை புதிய மதிப்பீடுகளிலிருந்து வந்ததாக அவதானிக்கலம். இது 12.6 பில்லியன் இலங்கை ரூபாய்களை 2016 செலவினங்களின் 8.5% வளர்ச்சியையும் 2015 ஒப்பிடுமிடத்து 9.8% ஆன சுருக்கத்தைக்காட்டி பொருட்கள் புதிய முன்மொழிவுகளிலிருந்து வரும் (அட்டவணை 3 ஐப் பார்க்க) பொருட்கள் சேவைகள் மீதான செலவினத்தின் அதிகரிப்பு (இலங்கை ரூபா 31 பில்லியனில், இலங்கை ரூபா 18.4) சேவைகள் மீதான செலவினத்தின் ஒரு சாதாரண வளர்ச்சியைக் காட்டுகிறது. இந்தச் சூழமைவில் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான மதிப்பீடு குறைத்து மதிப்பிடப்பட்டதாகத் தோன்றுகிறது. செலவினம் மேலும் பரவலாக்கப்படும்பொழுது பொருட்கள் சேவைகள் மீதான மொத்த மீண்டெழும் செலவினங்களிலிருந்து 31 பில்லியன் இலங்கை ரூபா அதிகரிக்கிறது. இலங்கை ரூபா 12 பில்லியனின் அதிகரிப்பு கல்வித்துறையில் பொருட்கள் சேவைகளுக்கான மீண்டெழும் செலவினங்களுடன் தொடர்புடைய முன்மொழிவுகளின் நிமித்தமாக ஏற்படுகிறது.

பகுப்பாய்வு :

2017 இல் 20.3% வளர்ச்சி 2017 இன் அடிப்படை மீதானது (2015 உடன் ஒப்பிடுமிடத்து 17% சுருக்கத்தைக் அது கண்டது) 2015 உடன் ஒப்பிடுமிடத்து 2017 இல் உண்மையான மாற்றம் எதையும் காணவில்லை. இறுதியாக 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகளில் 2016 இல் பொருட்கள் சேவைகளின் செலவினத்தின் வீழ்ச்சியை எது ஏற்படுத்தியது எனத் தெளிவாக இல்லை. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட வரைபு மதிப்பீடுகளிலிருந்து மதிப்பிடும்பொழுது பொருட்கள் சேவைகள் மீதான செலவினம் 2016 இல் 8% ஆல் வளர்ச்சியடைந்ததுடன் 2017 மதிப்பீடுகளில் 3% ஆல் சுருங்கியுள்ளது[7]

2015 ஐ 2017 உடன் ஒப்பீடு செய்யும்போது பொருட்கள் சேவைகளின் செலவினத்தில் ஒரு வளர்ச்சியைக் காட்டவில்லை.

**அவதானிப்புகள்:**

- 2016 இல் பொருட்கள் சேவைகள் மீதான செலவினத்தில் வீழ்ச்சிக்கான காரணம் மீதான தெளிவின்மை இருப்பதை எடுத்துக்கொண்டு இந்த மதிப்பீட்டில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு மேலதிக தகவல்கள் வழங்கப்படவேண்டிய தேவை இருப்பதுடன், செலவின வகைப்பாடானது குறைவாக மதிப்பிடப்படவில்லை என்பதுடன் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

[6] பொருட்கள் சேவைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட செலவினங்களின் முன்மொழிவுகள் பின் இணைப்பு அட்டவணை A4 இல் தரப்படுகிறது

[7] வழங்கல்கள், பயணச் செலவுகள், பேணுகைச் செலவுகள் மற்றும் சேவைகள் மீதான மீண்டெழும் செலவினச் சுருக்கத்தால் கணிக்கப்பட்டது

- மேலும் பொருட்கள் சேவைகள் மீதான அதிகரிப்பை பரிசீலிக்கையில் புதிய முன்மொழிவுகள் செலவின புள்ளிவிபரமானது பாரதூரமாக குறைத்து மதிப்பிடப்பட்டமை சாத்தியமாக இருந்தாலும் வரலாற்று சராசரிகளை பரிசீலிக்கும்பொழுது ஆகக்குறைந்தது 5% வளர்ச்சி புதிய செலவின முன்மொழிவாகிய (ரூபா 18.4 பில்லியனோடு) மேலதிகமாக 184 பில்லியன் இலங்கை ரூபாய்களின் 2015 மட்டங்களை அடிப்படையாக எடுக்கும்பொழுது 212 பில்லியன் இலங்கை ரூபாய்கள் மொத்தமாகவுள்ளது. (2015 செலவின மட்டத்தின் 15% வளர்ச்சி)

### 4.3 வட்டிக் கொடுப்பனவு

| செலவின வகை | 2017 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் (இல. ரூபா பில்லியன்களில்) | மொத்த செலவினத்தின் நூற்றுவீதம் | 2010 - 2015 வளர்ச்சி (காலப்பகுதி சராசரி) | 2016 இலிருந்து அதிகரிப்பு (இல. ரூபா பில்லியன்களில் | கொள்கை மாற்றங்களுக்கு உரியது (இல. ரூபா பில்லியன் களில்) | சாதாரண வளர்ச்சி மற்றும் சிறந்த நிர்வாகத்தை எடுத்துக் காட்டக்கூடியது இலங்கை ரூபா பில்லியன்கள்) |
|---|---|---|---|---|---|---|
| வட்டிக் கொடுப்பனவு | 680 | 25.7% | 8. 9% | 77 | | |

மூலம்: 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் மற்றும் 2015 ஆண்டின் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை

**ஊகங்களும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்.**

**ஊகங்கள் :** வரவு செலவுத்திட்ட உரையின் மதிப்பீடுகள் 2016 இல் 1699 பில்லியனிலிருந்து 1579 பில்லியனாக அங்கீகரிக்கப்பட்ட கடன் பெறுகை எல்லை வீழ்ச்சியடைந்ததாக மதிப்பிடுகிறது. அதில் 72% உள்நாட்டு பெறுகைகளாகவும், 28% வெளிநாட்டு கடன் பெறுகைகளாகவும் இருந்தது. இந்தக் கடன் கலப்பானது 2017 இல் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வட்டி மீளக்கொடுப்பனவு கடப்பாடுகளில் பௌதீக மாற்றம் ஒன்றிற்கு இட்டுச்செல்லும் என எதிர்பார்க்கப்படவில்லை.

2010 - 2015 காலப்பகுதியில் உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் 6.6% சராசரி வருடாந்த வளர்ச்சியைக் காட்டியிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கும் உண்மை நிலைக்கும் இடையிலான விலகல் 1.7% ஆக இருந்தது. அதே காலப்பகுதியில் வெளிநாட்டு வட்டிக்கொடுப்பனவு 23% ஆக வளர்ச்சியடைந்ததுடன், அங்கீகரிக்கப்பட்டவற்றுக்கும் உண்மையான கொடுப்பனவுகளுக்கும் இடையிலான விலகல் 49% ஆக உயர்வாக இருந்தது.

**நடவடிக்கை :** வட்டிக்கொடுப்பனவுகள் அல்லது கடன்சேவைகள் தொடர்பான வரவுசெலவுத்திட்ட உரையில் ஒரு விசேட முன்மொழிவும் இடம்பெற்றிருக்கவில்லை.

பகுப்பாய்வு :

2017 வட்டி வீதம் 2016 இன் சராசரி வட்டி வீதத்தைவிட உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் இதன் நிமித்தம் உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவு 2016 ஐ விட 2017

இல் உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாணய சீராக்கல் காணப்படினும், இதுவே அமெரிக்கடொலர் வட்டி வீதங்களுக்கு பிரயோகிக்கப்படக் கூடியதாக இருக்கும். வரவிருக்கும் கடன்கள் மற்றும் அவை தொடர்பான வட்டிக் கொடுப்பனவுகளின் அட்டவணை இந்தப் பகுப்பாய்விற்கு கிடைக்கப் பெறவில்லை.

**அவதானிப்புக்கள் :**

- உள்நாட்டு வட்டிக்கொடுப்பனவுகள் கடந்த 2010 - 2015 சராசரி வளர்ச்சி வீதத்தைவிட இரண்டு மடங்கு அதிகமானதாக உள்ளதுடன் இந்த மதிப்பீடு பிரயோகிக்கப்படக்கூடிய உயர் வட்டி வீதங்களின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவுமுள்ளது.
- வெளிநாட்டு கடன் பெறுகைகள் மீதான அனுமானங்கள் மற்றும் வரவேண்டிய வட்டிக் கொடுப்பனவுகள் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படவேண்டும். 2017 ஆம் ஆண்டு 8.8% வளர்ச்சி மதிப்பீடு ஒரு பாரதூரமான குறைந்த மதிப்பீடாக அமைவதற்கான சாத்தியம் உள்ளது. குறிப்பாக 23% வரலாற்று சராசரி வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து, இது குறைந்த மதிப்பீடே ஆகும். வெளிநாட்டு வட்டிக் கொடுப்பனவுகளுக்கான வரவு செலவுத்திட்ட செலவினம் சராசரியாக 49% கணிசமான இடைவெளியில் கடந்த காலத்தில் தொடர்ச்சியாகக் குறைத்து மதிப்பிடப்பட்டமை இந்த விடயத்தில் சரியான வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகளை உருவாக்குவதில் நிதியமைச்சின் பங்கிலுள்ள செயல்விளைவற்ற பதிவையே காட்டுகிறது.

**4.4 மாற்றங்கள்**

| செலவின வகை | 2017 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் (இல. ரூபா பில்லியன்களில்) | மொத்த செலவினத்தின் நூற்றுவீதம் | 2010 - 2015 வளர்ச்சி (காலப்பகுதி) | 2016 இலிருந்து அதிகரிப்பு (இல. ரூபா பில்லியன்களில் | கொள்கை மாற்றங்களுக்கு உரியது (இல. ரூபா பில்லியன்களில்) | சாதாரண வளர்ச்சி மற்றும் சிறந்த நிர்வாகத்திற்காக காட்டப்பட்டது (இலங்கை ரூபா பில்லியன்கள்) |
|---|---|---|---|---|---|---|
| மாற்றுகைகள் | 467 | 17.65% | 18.5 | 43 | 19.6% | 23.4 |

மூலம்: 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் மற்றும் 2015 ஆண்டின் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை

**ஊகங்களும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்.**

**ஊகங்கள் :** நலனோம்பல் மற்றும் மாற்றங்கள் மீதான செலவினங்கள் பிரிதாக பரிசோதிக்கப்படக்கூடிய பல்வேறு உட்கூறுகளைக் கொண்டுள்ளன.

உள்ளக மீதான மாற்றுகைகளின் செலவினம் 2010 - 2015 காலப்பகுதியின்பொழுது வருடத்திற்கு சராசரி 22% ஆல் அதிகரித்துள்ளது. 2017 க்கான மதிப்பிடப்பட்ட வளர்ச்சி 13% ஆக உள்ளதுடன், 2016 இல் வீட்டுத்துறை மாற்றங்கள் சுருங்கியதாக மதிப்பிடப்பட்டதிலிருந்து ஒரு குறைந்த அடிப்படையுடையதாக உள்ளபோதும், 2017 க்கான மதிப்பிடப்பட்ட வளர்ச்சி 13% ஆக உள்ளது[8].

கடந்த பத்து வருடங்களாக (2010 – 2015) ஓய்வூதியம் தொடர்பான செலவுகள் வருடாந்த சராசரியாக 10.7% அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட வளர்ச்சி 7.7% ஆகும். இந்த வருடங்களில் ஒப்புதளிக்கப்பட்ட மதிப்பீடுகள் தொடர்பான சராசரியானது 1.5% ஆகும். இது ஓய்வூதியங்கள் தொடர்பான உண்மையான செலவை விடக் குறைவானதாகும்.
2010 – 2015 காலப்பகுதிக்கான பொது கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான, இடமாற்றங்கள் தொடர்பான செலவுகள் வருடாந்த சராசரி அடிப்படையில் 23% ஆக அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட வளர்ச்சி 5.9% ஆகும். 2016 இல் முதல் குறைமட்ட வளர்ச்சி 2.3% ஆகும்.

2016-11-12 ஆம் திகதிய மதிப்பீடுகளின் பிரகாரம், ஒட்டுமொத்தமாக நோக்குகையில், உள்ளக மாற்றங்கள் 2016 இல் இலங்கை ரூபாய் 2017 இல் 424 பில்லியனிலிருந்து 464 பில்லியனாக அதிகரிக்கும், அதாவது 10% வளர்ச்சியடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**நடவடிக்கை**

மாற்றங்களைப் பொருத்தவரையில், புதிய பிரேரணைகளின் காரணமாகவே, செலவுகளில் 46% (பெரும்பாலும் இ.ரூபாய் 20 பில்லியன்) அதிகரிப்பு ஏற்பட்டது. எஞ்சிய இ.ரூபாய் 23 பில்லியன் அதிகரிப்பானது மாற்றச் செலவுகளின் பெயரளவிலான வளர்ச்சிக்கு காரணியானது (5.5% வளர்ச்சி)

**பகுப்பாய்வுகள்**

கடந்தகால சராசரி வளர்ச்சி மட்டங்களுடன் ஒப்பிடுகையில் 2017 இல் வீடுகளுக்கான மாற்ற வளர்ச்சியாக மதிப்பிடப்பட்ட வளர்ச்சியான 13.5% ஆனது குறைமதிப்பீடு போல் தோன்றுகிறது. 2017 இல் 7.7% வளர்ச்சியுருமென மதிப்பிடப்பட்ட ஓய்வூதிய செலவுகளுக்கும் இது ஏற்புடையதாகும், வரலாற்று ரீதியான சராசரி (10.7%) உயரிய வளர்ச்சி மட்டம் பரிசீலிக்கப்பட வேண்டுமென ஆலோசிக்கிறது. கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றமான 5.9% வளர்ச்சியும் கூட வரலாற்று ரீதியான சராசரிகளை விட (வருடாந்தம் 23%) குறிப்பிடக்கூடியளவு குறைவானதாகும்.

[8] மாற்றுகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட செலவினங்களின் முன்மொழிவுகள் பின் இணைப்பு அட்டவணை A5 இல் தரப்படுகிறது

**அவதானிப்புகள்**

- கடந்த கால வளர்ச்சி மட்டங்கள், மூலதன வரவு செலவுத் திட்டங்களை மிகைப்படுத்தி கூறுகின்ற வரலாறு ஆகியவற்றை பரிசீலிக்கையில், மதிப்பிடப்பட்ட மட்டங்களில் மூலதன செலவுகள் யதார்த்தபூர்வமாக அமையாது என்ற இடர் காணப்படுகின்றது. தற்போது எதிர்பார்க்கப்படுவதன் அரைவாசியான 20% வளர்ச்சியை எடுகோளாகக் கொண்டு அவசியமான/முன்னுரிமை மூலதனச் செலவை வெளிப்படுத்துவது பாராளுமன்றத்தைப் பொருத்தவரையில் மிகவும் அறிவார்ந்த ஒரு அணுகுமுறையாக இருக்கும்; மேலும் எதிர்பார்க்கப்பட்ட எஞ்சிய 20% வளர்ச்சிக்காக மேலதிக மூலதன செலவுகளை வழங்குதல். (வருடத்தில் முன்னேற்றங்கள் ஏற்படுவதன் காரணமாக வரவு செலவுத் திட்ட ரீதியான தடைகள் ஏற்படுவதில்லை) மூலதனச் செலவு செலவீடு தொடர்பிலான உறுதியான அர்ப்பணிப்புகளை மொத்த தேசிய உற்பத்தியிலிருந்து 100 பில்லியனினால் அல்லது 0.7% ஆல் இது குறைக்கும், மூலதன செலவு அதிகரிப்பு தொடர்பில் கருதப்பட்ட முறையான முன்னுரிமைப்படுத்தல் மற்றும் கொள்கை ரீதியான செயல்களின் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை இது அனுமதிக்கும்

- இருப்பினும் அது மொ.தே. உற்பத்தியில் ஒரு பங்கு என்ற வகையில் அது 2016 ஆண்டின் அதிகரிப்பினை விட 2017 அதிகரிப்பானது ஆகக் குறைந்தது என்பதை அவதானித்தல் வேண்டும். அத்துடன் இது மூலதன செலவினத்தின் மதிப்பீட்டின் 5.2% ஆவதுடன் இது வரலாற்று ரீதியான மூலதன செலவின விழுமியங்களுடன் ஒத்ததாக அமைகின்றது. (2010-2015 காலப்பகுதிக்கான மொ.தே உற்பத்தியின் சராசரி மூலதன செலவினம் 5.5% ஆகும்)

## 5. மூலதனச் செலவு

| செலவு வகை | 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் (இ.ரூபாய் பில்லியன்) | மொத்தச் செலவு வீதம் | 2010 -2015 வளர்ச்சி (காலப் பகுதிக்கான சராசரி) | 2016 இல் அதிகரிப்பு (இலங்கை ரூபாய் பில்லியன்) | கொள்கை மாற்றங்களுக்கான பங்களிப்பு (இ.ரூ.பில்லியன்) | சாதாரண வளர்ச்சி, சிறந்த நிருவாகம் ஆகியவற்றிற்கான பங்களிப்புகள் இ.ரூ. பில்லியன் |
|---|---|---|---|---|---|---|
| மூலதனச் செலவு | 697 | 26.4% | 13.7% | 207 | 87 | 120 |

மூலம் : 2016-11-12 ஆம் திகதிய மதிப்பீடுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கை.

**எடுகோள்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செயல்கள்**

**எடுகோள்கள்:** 2016 முதல் குறை மட்டத்திலிருந்து (இது 12.1% சுருக்கமாக காணப்பட்டது) கையகப்படுத்திய உண்மையான சொத்துகள் 71.6% இனால் வளர்ந்துவருவதன் காரணமாக நிலைச் செலவினம் 42.2% இனால் வளர்ச்சியுரும் என ஊகிக்கப்பட்டது.

**செயல்கள்:** 2016 ஆம் ஆண்டுடன் (மொத்த வளர்ச்சியில் 62.5%) ஒப்பிடுகையில் 2017 இல் மொத்த அதிகரிப்பான இ.ரூபாய் 207 பில்லியனில் புதிய மூலதன செலவு பிரேரணைகள் இ.ரூபாய் 87 பில்லியனாக காணப்பட்டது.

**பகுப்பாய்வு**

2010 – 2015 காலப் பகுதியில் உண்மையான சொத்துக்களை கையப்படுத்தியமைக்கான சராசரி வளர்ச்சி 14.6% ஆகும். வரவு செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட எண்ணிக்கையானது தொடர்ச்சியாக மூலதன செலவை மிகைமதிப்பீடு செய்துள்ளது என்பதை வரலாற்று ரீதியான சான்றுகள் தெரிவிக்கின்றன என்பதை கருத்திற்கொள்வது முக்கியமானதாகும். கடந்த காலங்களில் (2010 – 2015) ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் உண்மையான செலவு செய்தல் ஆகியவற்றிற்கிடையிலான விலகல் வருடத்திற்கு சராசரியாக 7.6% ஆகும். கடந்த காலங்களில் மூலதன செலவில் ஏற்பட்ட குறைப்புகள் நிதிச்சுற்றின் பிந்திய கட்டத்தில் செலவீடுகளை ஏற்படுத்தியது. இதன் காரணமாக செலவுகளை குறைத்தல் தொடர்பில் தற்காலிக தீர்மானங்களுக்கு இட்டுச் சென்றதுடன், முன்னுரிமை தொடர்பில் தீர்மானிப்பதற்கான பாராளுமன்றத்தின் ஆற்றலையும் குறைத்தது.

**அவதானிப்புகள்**

- கடந்த கால வளர்ச்சி மட்டங்கள், மூலதன வரவு செலவுத் திட்டங்களை மிகைப்படுத்தி கூறுகின்ற வரலாறு ஆகியவற்றை பரிசீலிக்கையில், மதிப்பிடப்பட்ட மட்டங்களில் மூலதன செலவுகள் யதார்த்தபூர்வமாக அமையாது என்ற இடர் காணப்படுகின்றது. தற்போது எதிர்பார்க்கப்படுவதன் அரைவாசியான 20% வளர்ச்சியை எடுகோளாகக் கொண்டு அவசியமான/முன்னுரிமை மூலதனச் செலவை வெளிப்படுத்துவது பாராளுமன்றத்தைப் பொருத்தவரையில் மிகவும் அறிவார்ந்த ஒரு அணுகுமுறையாக இருக்கும்; மேலும் எதிர்பார்க்கப்பட்ட எஞ்சிய 20% வளர்ச்சிக்காக மேலதிக மூலதன செலவுகளை வழங்குதல். (வருடத்தில் முன்னேற்றங்கள் ஏற்படுவதன் காரணமாக வரவு செலவுத் திட்ட ரீதியான தடைகள் ஏற்படுவதில்லை)

மூலதனச் செலவு செலவீடு தொடர்பிலான உறுதியான அர்ப்பணிப்புகளை 100 பில்லியனினால் இது குறைக்கும், மூலதன செலவு அதிகரிப்பு தொடர்பில் கருதப்பட்ட முறையான முன்னுரிமைப்படுத்தல் மற்றும் கொள்கை ரீதியான செயல்களின் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை இது அனுமதிக்கும். 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டின் வளர்ச்சி வீதம் குவைறவாகக் காணப்படுவதை அவதாணித்தல் முக்கியமானதானகும். அது தொ.தே. உற்பத்தியில் ஒரு பங்கு என்ற வகையில் அது மூலதன மதிப்பீட்டின் 5% குறைவாகக் காணப்பட்டது. இது வரலாற்று ரீதியான விழுமியங்களுடன் ஒத்ததாக அமைகின்றது. (2010-2015 காலப்பகுதிக்கான மொ.தே உற்பத்தியின் சராசரி மூலதன செலவீனமாக அமையும்)

**பிற்சேர்க்கை**

- **அட்டவணை அ1: 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள் என அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு கிடைக்கப்பெற்ற வருமான மதிப்பீடுகள்**

| ரூபா. பில்லியன் | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|
| வரி வருமானம் | 1,356<br>93% | 1,432<br>91% | 1,821<br>91% |

| | | | |
|---|---|---|---|
| **வருமான வரி** | **263**<br>**18%** | **236**<br>**15%** | **335**<br>**17%** |
| கூட்டுறவு | 156<br>11% | 110<br>7% | 158<br>8% |
| உழைக்கும் போது செலுத்துதல் | 26<br>2% | 32<br>2% | 51<br>3% |
| வட்டி மீதான வரி | 63<br>4% | 68<br>4% | 84<br>4% |
| தனிப்பட்டவை | 11<br>1% | 15<br>1% | 22<br>1% |
| பொருளாதார சேவைகள் வரி | 6<br>0% | 11<br>1% | 20<br>1% |
| **பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி** | **804**<br>**55%** | **854**<br>**54%** | **1,086**<br>**54%** |
| சேர் பெறுமதி வரி | 220<br>15% | 315<br>20% | 380<br>19% |
| உற்பத்தி வரி | 498<br>34% | 444<br>28% | 575<br>29% |
| சாராயம் | 105<br>7% | 130<br>8% | 180<br>9% |
| சிகரட் | 80<br>5% | 85<br>5% | 105<br>5% |
| மோட்டார் வாகனம் | 263<br>18% | 180<br>11% | 230<br>11% |
| பெற்றோலியம் | 45<br>3% | 45<br>3% | 55<br>3% |
| ஏனையவை | 4<br>0% | 4<br>0% | 5<br>0% |
| நாட்டை கட்டியெழுப்பும் வரி | 45<br>3% | 54<br>3% | 66<br>3% |
| தொலைத்தொடர்பாடல் விதிப்பனவு | 33<br>2% | 35<br>2% | 43<br>2% |
| வாகன வரிகள் மற்றும் ஏனையவை | 8<br>1% | 6<br>0% | 22<br>1% |
| **வரிகள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகம்** | **289**<br>**20%** | **342**<br>**22%** | **400**<br>**20%** |
| இறக்குமதிகள் | 132<br>9% | 135<br>9% | 165<br>8% |
| செஸ் | 46<br>3% | 55<br>3% | 60<br>3% |

| | | | |
|---|---|---|---|
| அத்தியாவசியப் பொருட்கள் வரி | 52<br>4% | 60<br>4% | 65<br>3% |
| கப்பற்றுறை மற்றும்' விமானத்துறை வரி | 59<br>4% | 92<br>6% | 110<br>5% |
| **வரி சாரா வருமானம்** | **99**<br>**7%** | **144**<br>**9%** | **189**<br>**9%** |
| சொத்து வருமானம் | 37<br>3% | 57<br>4% | 89<br>4% |
| குற்றப்பணம்,கட்டணங்கள்,விதிப்பணம் | 45<br>3% | 65<br>4% | 73<br>4% |
| ஏனையவை | 17<br>1% | 22<br>1% | 27<br>1% |
| **மொத்த வருமானம்** | **1,455**<br>**100%** | **1,576**<br>**100%** | **2,010**<br>**100%** |

ஆதாரம் : 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகள்.

**அட்டவணை அ2 : அரசாங்க நிதி பற்றிய குழுவின் அவதானிப்புகளின் பிரகாரம் வருமான மதிப்பீடுகளுக்கான உத்தேச திருத்தங்கள்**

| | 2016.11.12 ஆம் திகதிய மதிப்பீடுகளின் அடிப்படையில் | அவதானிப்புகளின் அடிப்படையில் |
|---|---|---|

| | 2017 | | உத்தேச திருத்தங்கள் 2017 | | திருத்தியது 2017 | |
|---|---|---|---|---|---|---|
| | இ.ரூபா பில்லியன் | மொ.தே. உ % | இ.ரூபா பில்லியன் | மொ.தே.உ % | இ.ரூபா பில்லியன் | மொ.தே .உ % |
| வரி வருமானம் | 1,821 | 13.5 | -126 | -0.9 | 1,695 | 12.6 |
| **வருமான வரி** | **335** | **2.5** | **-38** | **-0.3** | **297** | **2.2** |
| கூட்டுறவு | 158 | 1.2 | -26 | -0.2 | 132 | 1.0 |
| உழைக்கும் போது செலுத்துதல் | 51 | 0.4 | -12 | -0.1 | 39 | 0.3 |
| பிடித்துவைக்கும் வரி | 84 | 0.6 | | 0.0 | 84 | 0.6 |
| **பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி** | **1,086** | **8.0** | **-48** | **-0.4** | **1038** | **7.6** |
| சேர் பெறுமதி வரி | 380 | 2.8 | 10 | 0.1 | 390 | 2.9 |
| உற்பத்தி வரி | 575 | 4.3 | -58 | -0.4 | 517 | 3.8 |
| சாராயம் | 180 | 1.3 | -22 | -0.2 | 158 | 1.2 |
| சிகரட் | 105 | 0.8 | 0 | 0.0 | 105 | 0.8 |
| மோட்டார் வாகனம் | 230 | 1.7 | -36 | -0.3 | 194 | 1.4 |
| பெற்றோலியம் | 55 | 0.4 | 0 | 0.0 | 55 | 0.4 |
| ஏனையவை | 5 | 0.0 | 0 | 0.0 | 5 | 0.0 |
| **வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரி** | **400** | **3.0** | **-40** | **-0.3** | **360** | **2.7** |
| இறக்குமதி மற்றும் செஸ் | 225 | 1.7 | -25 | -0.2 | 200 | 1.5 |
| பீ.ஏ.எல் மற்றும் எஸ்.சீ.எல் | 175 | 1.3 | -15 | -0.1 | 160 | 1.2 |

**அட்டவணை அ3: அரசாங்க அரசாங்க நிதி பற்றிய குழுவின் அவதானிப்புகளின் பிரகாரம் செலவு மதிப்பீடுகளுக்கான உத்தேச திருத்தங்கள்**

| | 2016.11.12 ஆம் திகதிய | அவதானிப்புகளின் அடிப்படையில் |
|---|---|---|

| | மதிப்பீடுகளின் அடிப்படையில் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 | | உத்தேச திருத்தங்கள் 2017 | | திருத்தியது 2017 | |
| | இ.ரூபா. பில்லியன் | மொ.தே. உ % | இ.ரூபா. பில்லியன் | மொ.தே. உ % | இ.ரூபா. பில்லியன் | மொ.தே. உ % |
| **மொத்த செலவீனம்** | **2,645** | **19.6** | **-64.0** | **-0.5** | **2,579** | **19.1** |
| **மீண்டெழும் செலவினம்** | **1946** | **14.4** | **36.0** | **0.3** | **1982** | **14.7** |
| சம்பளமும் வேதனமும் | 615 | 4.6 | 0 | 0.0 | 615 | 4.6 |
| பொருட்களும் சேவைகளும் | 184 | 1.4 | 28 | 0.2 | 212 | 1.6 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 680 | 5.0 | கணிப்பிடப்படவுள்ளது | 0.0 | 680 | 5.0 |
| மாற்றங்கள் | 467 | 3.5 | 8 | 0.1 | 475 | 3.5 |
| **மூலதனச் செலவினம்** | **697** | **5.2** | **-100.0** | **-0.7** | **597** | **4.4** |

அட்டவணை A4 : பொருட்கள் மற்றும் சேவைகள் செலவின் கீழ் புதிய செலவு முன்மொழிவு ஒதுக்கீடுகள்

| பிரேரணை | அமைச்சு | தொகை மில்லியன் |
|---|---|---|
| விவசாயிகளுக்கு அதிக பால் தரும் பசுக்களை வழங்குதல் | விவசாய அமைச்சு | 400 |
| சிறிய அளவிலான கோழி விற்பனையாளர்களுக்கு குளிர்சாதனப் பெட்டிகளை வழங்குதல் | கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 75 |
| மினிப்பே இடதுகரை, கித்துள் ரூகம், முன்தெனி ஆறு மற்றும் தாராபுரம் குளம் ஆகிய புனரமைப்புகளுக்கு உதவுதல் | நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 600 |
| பொலன்னறுவை, மன்னார், வவுனியா, மொனராகல, அம்பாறை, அம்பாந்தோட்டை, அநுராபுரம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நிலநீரை மேற்பார்வை செய்வது தொடர்பான முன்னோடிக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். | நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 200 |
| சகல பாடசாலைகளுக்கும் மின்சாரம், நீர், துப்பரவாக்கல் வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குதல் | கல்வி அமைச்சு | 2000 |
| உயர்தர ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இலவசமாக “டெப்” வழங்குதல் | கல்வி அமைச்சு | 5000 |
| ஒவ்வொரு பாடசாலையும் ஆகக்கூடியது 50 கணனிகளை வாடகைக்கமர்த்துவதற்கான ஏற்பாடு செய்தல் | கல்வி அமைச்சு | 5000 |
| 1000 இயற்கை திறன் கொண்ட மாணவர்களுக்கு உதவும் முகமாக “சுபாக’ புலமைப்பரிசில் திட்டம் | கல்வி அமைச்சு | 30 |
| அரச ஆதரவு பாடசாலைகளுக்கும் அக்ரஹார காப்புறுதி நன்மை திட்டம், சொத்துக் கடன், இடர் கடன் வசதிகள் ஆகியவற்றை வழங்குதல். | கல்வி அமைச்சு | 25 |
| பல்கலைக்கழக மாணவர்கள் பாடத்திட்டம் சாராச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்கு உற்சாகப்படுத்தல் | உயர்கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சு | 100 |
| அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு செல்ல முடியாத மாணவர்களுக்கான கடன்திட்டம் | உயர்கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சு | 300 |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுனங்களில் கல்வி இளமாணி பாடநெறிகளை தொடர்வதற்காக 5000 மாணவர்களுக்கான கடன்திட்டம் | உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 100 |
| அரச தொழில்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சிப் பாடநெறிகளை தொடர்வதற்காக மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சு | 300 |
| ஆடைத் தொழில், சுகாதாரப் பராமரிப்பு, விருந்தோம்பல் மற்றும் நிர்மாணத் துறைகளில் தனியார் துறையால் பயிற்றுவிக்கப்படவிருக்கும் 10,000 இளைஞர்களுக்கான உதவுப் படி | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சு | 300 |
| கண்டுபிடிக்கப்படாத சிறுநீரக நோய்த் தடுப்பு | சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | 750 |
| தாதியர் பயிற்சிப் பாடசாலைகளை மேம்படுத்தல் | சுகாதாரம், போசணை மற்றும் | 200 |

| | | |
|---|---|---|
| | சுதேச மருத்துவ அமைச்சு | |
| சுகாதார அதிகாரிகள் நாட்டின் ஒவ்வொரு முன்பள்ளிகளுக்கும் விஜயம் மேற்கொள்ளல் | சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | 50 |
| ஏற்றுமதியையும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளையும் அதிகரிப்பதற்கு சர்வதேச ரீதியிலான சந்தைப்படுத்தல் நடவடிக்கை | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 1,000 |
| கொழும்பு சந்தைக் கண்காட்சி | ஏற்றுமதி அபிவிருத்தி சபை/ இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்/ இலங்கை தேயிலை சபை | 50 |
| தனியார் சுதந்திர வர்த்தக வலயங்களுக்கு அதிவேகப் பாதை ஒழுங்கையுடன் சேரத்த்து காணி, மின்சாரம் மற்றும் நீர் வசதிகளை வழங்கல் | அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு | 1,000 |
| வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகள் | கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு | 50 |
| சர்வதேச வெசக் தினத்தை கொண்டாடுதல் | புத்தசாசன அமைச்சு | 250 |
| சனாதிபதிச் செயலகத்தால் மதவழிபாட்டுத் தலங்களை அபிவிருத்தி செய்தல் | சனாதிபதிச் செயலகம் | 50 |
| மதவழிபாட்டுத் தலங்களின் புனரமைப்பை வசதிப்படுத்தல் | சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு | 25 |
| பிரிவெனாக்களின் உட்கட்டமைப்பு மற்றும் பிரிவெனா ஆசிரியர்களின் ஆற்றல் விருத்தி | புத்தசாசன அமைச்சு | 50 |
| சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியிலுள்ள திறமைசாலிகளை கண்டுபிடிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் | விளையாட்டுத்துறை அமைச்சு | 50 |
| முக்கியமான சர்வதேச போட்டிகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக தேசிய மட்ட மெய்வல்லுனர்களுக்கு ஆதரவளித்தல் | விளையாட்டுத்துறை அமைச்சு | 100 |
| விளையாட்டு பயிற்றுநருக்கும் பயிற்றுவிப்பாளர்களுக்குமான ஆற்றல் விருத்தி | விளையாட்டுத்துறை அமைச்சு | 50 |
| தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் ஆகியவற்றின் மேம்பாடு | தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு | 300 |
| மொத்தம் | | 18,405 |

**அட்டவணை அ5: கைமாற்றல்களின் கீழ் புதிய செலவின முன்மொழிவு ஒதுக்கீடுகள்**

| முன்மொழிவு | அமைச்சு | பணத்தொகை ரூபாய் மில்லியன்களில் |
|---|---|---|
| விவசாயிகள், விவசாய அமைப்புகள் மற்றும் வேளாண் பதப்படுத்தல் நிறுவனங்களுக்கான 50% சலுகை வட்டிக் கடன் வழங்கல் | கமத்தொழில் அமைச்சு/ நிதி அமைச்சு | 400 |
| விவசாயத்தை பொறிமுறைப்படுத்துவதை மேம்படுத்துவதற்கான சலுகை வட்டிக் கடன் திட்டம் | கமத்தொழில் அமைச்சு/ நிதி அமைச்சு | 50 |
| 50% சலுகை வட்டி வழங்கி தனியார்துறை முதலீட்டாளர்களை ஒப்பந்த அடிப்படையிலான விவசாயத்தில் முதலீடு செய்ய ஊக்கமளித்தல் | கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 350 |
| சிறிய அளவிலான கோழி வளர்ப்பு வர்த்தகர்களுக்கு குளிர்சாதனப் பெட்டிகளை வழங்கல் | கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 75 |
| மீன் வளர்ப்பு நிலையங்களை தாபிப்பதற்கு புதிய பூரணமான கிராமிய கடன் திட்டம் | கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 100 |
| 2,000 பூச் செடி வளரப்புப் பண்ணைகளை தாபிப்பதற்கு 50% சலுகை வட்டிக் கடன் வழங்கல் | கமத்தொழில் அமைச்சு/ நிதி அமைச்சு | 50 |
| அலங்கார மீன் வளர்ப்பு கைத்தொழில்துறைக்காக 50% சலுகை வட்டிக் கடன் வழங்கல் | கமத்தொழில் அமைச்சு/ நிதி அமைச்சு | 25 |
| 1,000 மிகத்திறமையான சிறுவர்களுக்கு ஆதரவளிக்க “சுபாக” புலமைப்பரிசில் திட்டம் | கல்வி அமைச்சு | 30 |
| மாற்றுத் திறனாளி சிறுவர்களுக்கான விசேட கல்வி முறையின் மேம்பாடும் நாட்பமியின் அதிகரிப்பும் | கல்வி அமைச்சு | 175 |
| அரச சார்ந்த பாடசாலைகளுக்கான மேலதிக ஆக்ரகார காப்புறுதி நலன் திட்டம், ஆதன கடன் மற்றும் இடர் கடன் வசதிகள் | கல்வி அமைச்சு | 25 |
| மாணவர்களுக்கான ரூபா 200,000 சுகாதாரக் காப்புறுதி | கல்வி அமைச்சு | 2,700 |
| உலகிலுள்ள சிறந்த பல்கலைக்கழகங்களுக்குச் செல்வதற்காக அரச பல்கலைக்கழகங்களில் பயிலும் திறமையான பட்டதாரிகளுக்கான புலமைப்பரிசில் திட்டம் | உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 500 |
| கிராம அலுவலர் பிரவு ஒவ்வொன்றிலும் தெரிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்குவதற்காக ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் ரூபா 1 மில்லியன் வழங்கப்படவுள்ளது. | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 7,000 |
| சலுகை வட்டிக் கடன் திட்டம் | சுற்றுலாத்துறை அமைச்சு அபவிருத்தி மற்றும் கிறிஸ்த்த அலுவல்கள் | 500 |
| தற்போதுள்ள காப்புறுதித் திட்டத்தை விஸ்தரித்தலும் | உள்ளக அலுவல்கள், | 50 |

| | | |
|---|---|---|
| பலப்படுத்தலும் | வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | |
| மின்சார வாடகை கார்களை ஊக்குவிப்பதற்காக 50% சலுகை வட்டிக்  கடன் வழங்கல் | போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சு | 200 |
| பாடசாலை வேன்களை தரம் உயர்த்த 75% சலுகை வட்டி கடன் வழங்கல் | போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சு | 150 |
| 100,000 வீடுகளுக்காக ரூபா 200,000 வரையிலான 50%  சலுகை வட்டிக் கடன் வழங்கல் | நிதி அமைச்சு | 1,000 |
| அங்கவீனமுற்ற படைவீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கல் | பாதுகாப்பு அமைச்சு | 3,500 |
| பங்களிப்பு ஓய்வூதிய நிதியம் | பொது நிர்வாக அமைச்சு | 1,000 |
| வியாபார முன்னெடுப்புகளில் ஈடுபடுவதை ஊக்கமளிப்பதற்காக  ஆகக் குறைந்தது 1,000  அரச பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு ரூபா 1.5 மில்லியன் முழுச் சலுகை வட்டிக் கடன்களை வழங்கல் | உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 150 |
| ஊடகவியலாளர்களுக்கு தமது உபகரணங்களை தரம் உயரத்திக்கொள்வதற்காக கடன் பெற்றுக்கொள்ளும் போது சலுகை வட்டி | பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 25 |
| ரூபா 2,000 ஐ விடவும்  அதிகமான மாதாந்த மின்சாரக் கட்டணம் உடைய வீடுகள் சூரிய சக்திக்கு மாறுவதற்காக சலுகை வட்டி | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு | 1,500 |
| மொத்தம் | | 19,555 |